விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (16.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## காதலிப்பதாக ஏமாற்றி அழைத்துச் சென்ற பெண்ணை நள்ளிரவில் நடுக்கடலில் தள்ளிவிட்ட இளைஞன்

(நெடுந்தீவு)

காதலிப்பதாக ஏமாற்றி நெடுந்தீவு ஊடாக தலைமன்னாருக்கு அழைத்துச் சென்ற பெண் ஒருவரை நள்ளிரவு வேளை நடுக்கடலில் தள்ளிவிட்டு நகைகளை அபகரித்த இரு இளைஞர்களை நெடுந்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீச்சல் தெரிந்த பிரஸ்தாப பெண் மீனவர்களின் உதவியுடன் கரையேறினார். இச்சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரிய வருவதாவது,

ஊர்காவற்துறையைச் சேர்ந்த திருமணமாகி கணவர் வெளிநாட்டிலுள்ள 30 வயதுடைய பெண் ஒருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவரின் உறவினர் என தெரிவிக்கப்பட்ட இளைஞனும் கடந்த 6 மாத காலமாக காதலித்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த ஜோடி கடந்த 26ஆம் திகதி கண்டிக்குச் சென்று விட்டு மறுநாள் வவுனியாவுக்குத் திரும்பியுள்ளனர். பின்னர் பெண்ணை வவுனியாவில் நண்பர் ஒருவரின் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரான அழைப்பாணையை இலங்கையில் இரு பத்திரிகைகளில் பிரசுரிக்க உத்தரவு

### அமெரிக்க நீதிமன்றம் பிறப்பித்தது

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கொலம்பியா நீதிமன்றத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை உத்தரவை மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அதனை இலங்கையில் இரு பத்திரிகைகள் மற்றும் தமிழ்நெட் இணையத்தளத்திலும் வெளியிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் போர்க்குற்ற வழக்குகளே. இவற்றின் மீது பிறப்பிக்கப்படும் அழைப்பாணை (சம்மன்) எதையும் ஜனாதிபதியோ இலங்கை அரசோ பெற்றுக்கொள்ளாமல் திருப்பியனுப்பவது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வழக்குகளுக்கு தமிழர்கள் சார்பில் ஆஜராகும் புரூஸ் பெஃயின் யோசனையின் படி புதிய உத்தரவொன்றை அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி கோடெல்லி பிறப்பித்துள்ளார்.

பாக்ர்காசிப்பிள்ளைமனோகரன் என்பவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குஎதிராக ஒரு போர் குற்ற வழக்கை தொடர்ந் (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு கனடா கொடுக்கும் அழுத்தத்தால் பொதுநலவாய மாநாட்டில் பிளவுகள் ஏற்படும்

## கனேடிய ஊடகம் ஆரூடம்

(ரொரன்ரோ)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும் என கனேடியப் பிரதமர் கொடுத்துவரும் அழுத்தங்களால் இம்மாத இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிளவுகள் ஏற்படுமென கனேடிய ஊடகம் ஒன்று ஆரூடம் வெளியிட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. பாதுகாப்பு அமைச்சராக பிலிப் ஹேமண்ட் நியமனம்

(லண்டன்)



பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் ராஜினாமாவையடுத்து புதிய அமைச்சராக பிலிப் ஹேமண்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் கூட்டணிக்கட்சிகளின் சார்பில் போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

கடந்த 1997 இல் முதன்முறையாக பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து வர்த்தகத்துறை, உற்பத்தித்துறை மற்றும் இயற்கை எண்ணெய், எரிவாயு நிர்மாணப்பணிகள் துறையில் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (பர)

## சுவிஸ் வங்கியில் வைப்பிலுள்ள நிதி மூலம் போரை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் திட்டம்

### அமைச்சர் முரளிதரன் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான பெருந்தொகையான பணம் சுவிஸ் வங்கிகளில் இருப்பதாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிபடைந்த பின்னர் வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் நலன்கருதி எவ்விதமான நிதிகளையும் வழங்கவில்லை எனவும் இந்தப்பணத்தைப் பயன்படுத்தி, அவர்கள் மீண்டும் போர் ஒன்றை ஆரம்பிக்க தயாராகிவருவது குறித்து அரசாங் கத்திற்கு தகவல் கிடைத்துள்ள தாகவும் முரளிதரன் கூறியுள் ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் இரகசியங்களை அறிந்த ஒரே நபர் தான் என தெரிவித்துள்ள முரளிதரன் வெளிநாடுகள் இலங்கைக்கு எதிராக பொய்யான போர்க்குற்றச் சாட்டுக்களை சுமத்தினால், புலிகளுக்கு உதவிய நாடுகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் வெளியிடப்படும் எனவும் கூறியுள்ளார்.

சீட்டுக்கட்டில் உள்ள நான்கு ஆசிகள் மாத்திரமல்ல துரும்பும் தன்னிடமே இருப்பதாகவும் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் நாடுகளின் துரும்புச்சீட்டும் தன்னிடம் இருப்பதாகவும் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் மேலும் தெரிவித்துள்ளார். (பர)

## பலாலி ஆசிரியர் கலாசாலை பற்றி நான் எதுவும் தெரிவிக்கவில்லை

### ஊடகங்களே மிகைப்படுத்தின–யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)



பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றதாக ஊடகங்களில் தாம் தெரிவித்ததாக வெளியான செய்தியை முற்றாக மறுத்தார் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் (19ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேர்தலின் பின்னர் வெளிநாடு செல்ல முயற்சித்தார் பொன்சேகா—விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று இரண்டு தினங்கள் செல்லும் முன்னர் தான் உள்ளிட்ட தமது குடும்பத்தினர் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க் கட்சியின் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா அமெரிக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல்கள் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வாஷிங்டனில் உள்ள இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பிய கேபிள்தகவல்களை அடிப்படையாக கொண்டு அந்த இணையத்தளம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூர் நோக்கி செல்லவே சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இலங்கை படையினர் அவர் தங்கியிருந்த விடுதியை சுற்றி வளைத்திருந்ததுடன் அவர் போய் வரும் இடங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தனர். இதன் பின்னர் சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. (4-2)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் யாழ்.செயலகத்தில் முறைப்பாட்டு நிலையம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்வதற்கான முறைப்பாட்டு நிலையம் ஒன்றை யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைக்க திட்டமிட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்த யாழ்.மாவட்டத்தில் உள்ள பெண்கள் அமைப்புக்களை இணைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்தோடு மாவட்ட செயலகத்தில், பாதிக்கப்படும் பெண்கள் முறைப்பாடு செய்வதற்கு இலகுவாக முறைப்பாட்டு நிலையம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டு நிலையம் மிகவிரைவில் அமைக்கப்படவுள்ளது. இதன்மூலம் பாதிக்கப்படும் பெண்கள் துணிந்து முறைப்பாடு செய்ய முடியும். அத்தோடு பெண்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கும் தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (பா-6)

## ஏற்பாட்டுக் குழுக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் பருத்தித்துறைப் பிரிவின் தொண்டர் ஊக்குவிப்பு விழா நடத்துவதற்கான குழுக் கூட்டம் இன்று பருத்தித் துறை பிரிவுக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஊக்குவிப்பு விழா நடத்துவதற்கான திகதி மற்றும் தொண்டர்களை ஊக்குவித்து சான்றிதழ், பரிசுகள் வழங்க வேண்டிய தொண்டர்களை தீர்மானத்தல் என்பன இடம்பெறும். (பா-12)


**உடனடி வேலைவாய்ப்பு**
**[ Management Trainee 2011/2012 ]**

கனடாவை தலைமை அலுவலகமாகக் கொண்டு சர்வதேச ரீதியில் இயங்கும் அதன் இலங்கையின் வட மாகாண(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார்) கிளைகளுக்கு முகாமைத் துவப்பயிற்சிக்கு (Management Trainees) ஆட்கள்தேவை O/L, A/L சித்தியடைந்தவர்கள், தொழிலை எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(ஆண்கள் 18-30 வயதுக்கு உட்பட்டவர்கள்)

- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் மாதாந்தம் 50 000/= மேல் பெறலாம்.
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- பயிற்சி காலம்: 3-6 மாதங்கள் மட்டும்.

(சி-4743)

தொடர்புகளுக்கு: 0777274795, 0244907449
(10.00 AM - 12.00, 2.30 PM - 5 PM)

**மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி**

இடம்: பெரியவிளான் சவாரித்திடல்
காலம்: 16.10.2011 ஞாயிறு (இன்று) பி.ப. 1 மணி

-விவசாயிகள், பெரியவிளான்

(C-4742)

**STUDY IN UK POLAND**

Jan Intake

- IELTS தேவையில்லை.
- U.K., New Zealand, Singapure, Malaysia போன்ற நாடுகளுக்கு Student Visa ஒழுங்கு செய்து தரப்படும்.
- U.K. Visa பெற்றுக் கொடுக்க முன் College Cash அடங்கிய எந்த ஒரு கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
- 100% Visa உத்தரவாதம்.
- O\L தகைமை போதுமானது.
- Child Student (4-17) உட்பட்ட சிறுவர்களுக்கு IELTS இன்றி U.K க்குள் பிரவேசிக்க அரிய வாய்ப்பு பெற்று தரப்படும்.
- ESOL, IELTS, B1, B2, A1/A2 வகுப்புக்கள் எமது கிளை நிறுவனத்தின் ஊடாக K. Srirajkumar ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
- முதல் 10 மாணவர்களுக்கு விசேட சலுகை வசதி செய்து கொடுக்கப்படும்.
- யப்பானில் இருந்து நவீன வகையான பஜீரோக்கள் இறக்குமதி செய்து தரப்படும்.
- மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

**ISC LANKA (Pvt) Ltd**

No. 533, Stanly Road,
Rasavinthoddam Junction
Jaffna.

தொடர்புகளுக்கு
General Manager
K. Rajitha
077 3745447

Head Office:
109, Cristin Road,
Braville
MiKt 137 BP
Milton keyms
U.K.

(6604)

**வேலைவாய்ப்பு**

எழுதுநர் மற்றும் அச்சக வேலை தெரிந்தவர்(பெண்கள்) தேவை.
0775040714
(6607)

**சேவை முகவர்**

காணி, வீடுகள் விற்பனைக்கு
மணல்தறை லேன், பழம் வீதி, றக்கா றோட், கொக்குவில், 1-ம் குறுக்குத் தெரு, நுணாவில் 21 பரப்பு, யாழ். நகரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புக்கு: சுந்தரம்
0774819801, 0212229177

**காணி விற்பனைக்கு**

பளை, கச்சக வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 6 ஏக்கர் தென்னங் காணி விற்பனைக்கு உண்டு.
புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:கா.செல்வராணி
0779592051
(6396)

**கடை தேவை**

யாழ் நகரில் காகிதாதி வியாபாரம் செய்வதற்கு சகல வசதிகளும் கொண்ட கடை அல்லது பிரதான வீதியில் வீடு வாடகைக்கு தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்
குமார்:- 0777890915
கார்த்தி:- 0777311152
(6381)

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி
கோப்பாய் மத்தியில்
நன்னீர் வசதியுள்ள
40 பரப்பு காணி
விற்பனைக்குண்டு.
பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0718175820
(6606)

**பெண் விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் உள்ள எமது புடைவை நிறுவனத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை.
சிட்டை எழுதுநர் (பெண், வயது: 20 – 30)
தொடர்புக்கு:- 0777-488093, 021 2225578
(6608)

**கணக்காளர் தேவை**

இல. 127/14, யுமிலி பஜார் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும்

**குமார் ரெக்ஸ்**

கடைக்கு கணக்காளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.
(சி-4737)

**தரம் 5 மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கைநெறி (TKY -5)**

அடுத்த வருடம் 2012, 6-ம் தரத்தில் ஆங்கில மொழி மூலம் (English Medium) கற்க விரும்பும் மாணவர்களுக்குரிய 3 மாத கால தயார்ப்படுத்தல் ஆங்கில கற்கை நெறி.
கணித, விஞ்ஞான கலைச் சொற்கள் அறிமுகப்படுத்தப்படும்.
சனி,ஞாயிறு மு.ப. 10 மணி

அஞ்சல் சேவை, SLAS, விரிவாக்கல் உத்தியோகத்தர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்.
விரிவுரை : மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி
சனி, ஞாயிறு மு.ப. 9 மணி

UK, அவுஸ்திரேலியா செல்லவிரும்புபவர்களிற்கு குறைந்த கட்டண விசா ஆலோசனைகள், IELTS, B1,A1 வகுப்புகள்.
(6397)

**திசைகாட்டி**

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். ☎:021 491 4527
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தைக் கடந்தவுடன் வலது பக்கமாக வரும் ஒழுங்கை)

**தீபாவளியை முன்னிட்டு**

**நல்லி சில்க்ஸ் மற்றும் ராசி சில்க்ஸ் இன்**



இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் 30-ம் திகதி வரை அட்டகாசமான ஆடைத்தள்ளுபடி....

தீபாவளியை முன்னிட்டு இந்தியா மற்றும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகள் குறைந்த விலையில்....



MEGA SALE

ராசி சில்க்ஸ் — சல்யாணப்பட்டுப்புடைவைகளின் கைராசியான நிறுவனம் — நல்லி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P:021 222 5571 — 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 5573



# கலர் கலராய் தீபாவளி!

கண்கவர் வர்ணங்களில்
கச்சிதமான டிசைன்களில்
எமரல்ட் தீபாவளி ஸ்பெஷல்
சேர்ட்கள் இப்பொழுது
சந்தையில் கிடைக்கின்றன.

எமரல்ட் அணியுங்கள்
தீபாவளிக்கு அசத்துங்கள்!

ரூபா.25,000 பெறுமதியான எமரல்ட் சேர்ட் அலுமாரியை வெல்லும் பரிசிழுப்பிற்கு உங்களைப் பதிவு செய்யுங்கள்.

பெயர் :........................................

முகவரி :........................................

தொ.பே :........................................

இவ் வவுச்சரை அனுப்பவேண்டிய முகவரி: எமரல்ட் இன்டர்நெஷனல், சேர்ட் அலுமாரி பரிசிழுப்பு, இல.104/4, தெஹிவளை வீதி, மஹரகம.

Promo No: 809524

**Emerald®**

சேர்ட் என்றால் எமரல்ட் மட்டுமே

முடிவுத் திகதி: 2011 ஒக்டோபர் 26

பரிசிழுப்புத் திகதி: 2011 நவம்பர் 9

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

சங்கானை ஐ.டி.எம். நேசன்ஸ் கம்பஸின் முதலாவது ஆண்டுவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல 2 மணிக்கு நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சர்வதேச ஐ.டி.எம். நிறுவனக் குழுவின் தலைவர் வி.ஜனகன், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்லைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் பி.நிமலதாசன், சங்கானை எச்.என்.பி. கிளையின் முகாமையாளர் எம்.தயாகரன், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி ஐ.டி.எம். நேசன்ஸ் கம்பஸ் முகாமைத்துவ தலைவர் எல்.ஆதவன், முகாமையாளர் ஜெ.கேதீஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் ஆசியுரையினை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீ ஜயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் உடுவில் ரெயின்போ கிறிஸ்தவ ஆலய சிரேஷ்ட பாதிரியார் வணபிதா ஜெ.டி.ரட்ணம் ஆகியோர் ஆசியுரையினை வழங்கவுள்ளனர். (4-12)

## விமான சேவைக்கு புதிதாக ஐந்து விமானங்கள் சேர்ப்பு

(கொழும்பு)

தேசிய விமான சேவைக்கு எதிர்வரும் 5 மாதங்களில் 5 புதிய விமானங்கள் சேர்த்துக் கொள்ளப்படுமென சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கா ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

ஏ-320 வகையைச் சேர்ந்த 3 விமானங்களும் நீண்ட தூரம் பயணிக்கக்கூடியதாக 2 விமானங்களும் நாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளன.

இவ் வருட இறுதிக்குள் 2 விமானங்களின் விமான சேவைகள் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய விமானங்கள் அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னர் கிடைக்கும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா விமான சேவையாளர்களிடம் 17 விமானங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கை அடுத்த சில ஆண்டுகளில் 30 ஆக அதிகரிப்பது அரசாங்கத்தின் இலக்காகும்.

ஆசியாவின் அதிசயமான இலங்கையை மகிந்த மாற்று சிந்தனை வேலைத்திட்டத்தில் சிவில் விமான சேவை என்பவற்றில் முக்கிய இடம் உண்டு.

விமானத் துறையில் இவ்வாறான அபிவிருத்தியை மேற்கொள்ள தேவையான திட்டங்கள் அமுலாக்கவுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றன. ஏ-380 வகையைச் சேர்ந்த நவீன விமானங்கள் தரையிறங்கவும் இந்த விமானங்களுக்கு வசதிகளை வழங்கக் கூடிய வகையிலும் கட்டுநாயக்க விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படும்.

இரத்மலானை விமான நிலையம் நகர விமான நிலையமாக மேம்படுத்தப்படும். நுவரெலியா, கண்டி ஆகிய இடங்களில் புதிதாக இரண்டு உள்ளூர் விமான மையங்கள் அமைக்கப்படவிருக்கிறது. இந்த வேலைத்திட்டங்களின் மூலம் சுற்றுலாத்துறைக்கும் தேசிய பொருளாதார துறைக்கும் பாரிய அளவிலான ஒத்துழைப்பு கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (4-2)

## இராசி பலன்

16.10.2011

(புரட்டாதி 29, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

சதுர்த்தி பிற்பகல் 3.04 மணிவரை

ரோகிணி பின்னிரவு 4.42 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொழில் நலன்கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை அமையலாம்.

**மிதுனம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம்.

**கடகம்** புதிய பொருட்சேர்க்கையுண்டு, தொழில் நன்மையுண்டு, உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், முன்னேற்றத்திற்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிறப்பான நாள், தொழில் முன்னேற்றகரமாக அமையும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் குறையும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**துலாம்** துயரங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்** அபூர்வ சந்திப்புக்கள் இடம்பெறலாம், கஷ்டப்பட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், தொழில் முன்னேற்றம் கருதி புதியவர்களை நாடுவீர்கள்.

**தனுசு** வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் குறையும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சொத்துக்களால் நன்மையுண்டு, மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் வளர்ச்சி மேம்படும், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

**கும்பம்** தாய்வழி ஆதரவு கூடும், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** நேற்றைய பிரச்சினைக்கு இன்று தீர்வு கிடைக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு.

வளவன்

## கோப்பாய் பிரதேச மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் சேவை

(நல்லூர்)

அச்செழு 511 ஆவது படை அணியினரும் கோப்பாய் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாமும் இலவச கண்ணாடி வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரால் கண் பரிசோதனை செய்யப்பட்டு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இவ் இலவச கண்ணாடிகள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் கோப்பாய் பிரதேச மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-3-134)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்ற செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனுக்கு இணுவில் அறநெறிப் பாடசாலைச் சமூகமும் பொது மக்களும் வழங்கும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசியுரைகளை இணுவில் கந்தசுவாமி கோவில் சிவஸ்ரீ ந.உருத்திர மூர்த்திக் குருக்கள், நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வாழ்த்துரையினை உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்தோடு பல கலை நிகழ்வுகளும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சுக்களும் இடம்பெறவுள்ளது. (4-12)

## வாரம் ஒரு தகவல்

## மனச்சாட்சி

"இந்த எலெக்ட்ரிக் டிரெயின்லே நீங்கள் எதுவரைக்கும் போகவேண்டும்?"

"எதற்குக் கேட்கிறீர்கள்"

"இல்லை... உங்களிடம் கதைத்துக்கொண்டு வரலாமே என்றுதான் கேட்கிறேன்!"

"தாம்பரம் வரைக்கும் போகின்றேன்"

"ரொம்ப வசதியாகப் போய்விட்டது! நானும் அங்கேதான்! கையிலே என்ன? விரல்!"

"அது இல்லை... விரலிலே என்ன?"

"மோதிரம்!"

"அட, அதுவுமில்லை. ஏதோ சுவாரஸ்யமாக படிச்சிட்டு வருகிறீங்களே அது என்ன என்று கேட்டேன்!"

"ஓ... இதுவா? இது ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை!"

"அதிலே என்ன விசேஷம்?"

"ஒரு மனச்சாட்சியுள்ள திருடனைப் பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது!"

"எப்படி?"

"பிலடெல்பியா நகரத்திலே ஒருவன் 6 அரை இலட்சம் டொலரை திருடி விட்டான். இரண்டு வருடமாக அதை உல்லாசமாக செலவு செய்திருக்கின்றான். அதற்குப்பின்னர் அவனுக்கு மனச்சாட்சி உறுத்த ஆரம்பித்தது!" உள்ளூர் பத்திரிகைக்கு ஒரு வாசகர் கடிதம் வரைந்தான்.

"அதில் அந்தப்பணம் எவ்வாறு திருடப்பட்டது?" அந்தப் பணத்தை திருடியது நான் தான்! அதே திகதியான தை மாதம் 20 ஆம் திகதியிலே பொலிசிடம் என்னை ஒப்படைக்கப் போகின்றேன் என எழுதப்பட்டிருந்தது.

"அதன்பின் அதைப் படித்தவர்கள் எல்லோரும் யாரோ ஒருவன் கிறுக்கன் இப்படி விளையாட்டாக எழுதியிருக்கிறான் என்று நினைத்திருக்கிறார்கள்! பொலிசாரும் அதை பொருட்படுத்தவில்லை! ஆனால்... சரியாக சொன்னபடி... சொன்ன திகதியில் அவன் பொலிசாரிடம் சரணடைந்து விட்டான்.

"நமது ஊரிலே இப்படிப்பட்டவனை பார்க்க முடியுமா?"

"ஏன் முடியாது?"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"இதைக் கேட்ட பின்னர் எனக்கும் கூட மனச்சாட்சி உறுத்த ஆரம்பித்துவிட்டது"

"இதை வைத்துக்கொள்ளுங்கள் சேர்!"

"உங்கள் கைப்பையினை சிறிது நேரத்திற்கு முன்னர் உங்கள் பொக்கெட்டிலிருந்து நான் எடுத்தேன்"

"அதிலே இருந்தது 15 ரூபாய்! அதனைக் கூட தொடுவதற்கு எனக்கு மனம் வரவில்லை! அப்படியே வைத்து விட்டேன்! சரியா இருக்கிறதாவென்று! எண்ணிப் பாருங்கள்!" என்றான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 130 | 120 | 90 |
| தக்காளி | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 25 |
| கோவா | 35 | 60 | 30 |
| கரட் | 60 | 70 | 50 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கரணைக்கிழங்கு | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 60 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 40 | 70 | 40 |
| போஞ்சி | 70 | 110 | 70 |
| கத்தரி தம்புள்ள | 35 | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 12 | 20 | 15 |
| தேசிக்காய் | 280 | 340 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# ரணில் தலைமை பதவிக்கு பலத்த சவால் தோன்றியுள்ளது

## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு பலத்த சவால் தோன்றியுள்ளதாக அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் பற்றீசியா புட்டினீஸ் வோஷிங்டனிலுள்ள இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ள இரகசியத் தகவல் பரிமாற்றத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் சிங்களக் குடியேற்றமும் ரணிலின் தலைமைத்துவத்துக்கு சவாலைத் தோற்றுவித்துள்ள ஒரு முக்கிய காரணியாகும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் ரணிலின் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதற்கு உதவும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் அத்தகவல் பரிமாற்றக் குறிப்பில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. (4-2)

# ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கையை முன்னெடுக்க விஜயகலா தலைமையில் குழு

(கொழும்பு)

வடமாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.சுவாமிநாதன், விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரது தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் வடக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து விவகாரங்களையும் கையாளவுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் தொகுதி மட்டத்தில் புதிய அமைப்பாளர்களை நியமிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்களுக்கே இந்த அமைப்பாளர் பதவிகள் வழங்கப்படும் எனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. இந்த மாற்றங்களைக் கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்கவே செய்துள்ளார்.

இதேவேளை மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, மேல் மாகாண சபை உறுப்பினரான சிறிலால் லக்திலக ஆகியோரைக் கட்சி உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியமை தொடர்பில் தான் சட்ட நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக அதே கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.(4-2)

# துமிந்தவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன் கொலன்னாவை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பிரசன்ன சோலங்க ஆராச்சிக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டின் பேரிலேயே பிரஸ்தாப வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கடந்த 31ஆம்திகதி சோலங்க ஆராச்சி வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்த போதும் அது குறித்த விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருக்கவில்லை.

அதன் காரணமாக சோலங்க ஆராச்சி தற்போது அது தொடர்பில் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதன் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (4-2)

# மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமசேவகர் பற்றாக்குறை

## 10 கிராம சேவையாளர் வெற்றிடங்கள் நிலவுகின்றன

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களுக்கு கிராம சேவையாளர்கள் பற்றாக் குறை யினால் மக்கள் பெரும் சிரமங் களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேற்படி உதவி அரசாங்க அதி பர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிற்கு 18 கிராமசேவையாளர்கள் தேவை யான நிலையில் தற்பொழுது 8 கிராம சேவையர்ளர்களே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் அதனால் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலையும் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் இக் கிராம சேவையாளர் வெற் றிடங்களை நிவர்த்தி செய்து அப் பகுதி மக்களின் சிரமங்களை நீக் குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (4-3-24)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க் சிய குழுவினரால் நடாத்தப்படும் நவ- தாரண்மை வாதமும் ஜே. வி.பி. பிளவும் எனும் தொனிப் பொருளிலான கருத்தாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஏ.சி. ஜோர்ஜ் தலைமை யில் நடை பெறவுள்ளது.

இதில் ஆரம்ப உரையினை சொ. சிவபாலன் வழங்கவுள்ளார். (4-12)


உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

Engineering Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



City & Guilds Progression Path

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months

Professional Engineer (Equivalent to BEng-UK)

Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB

NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB

A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB

O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு,
விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

# இலங்கையில் பரந்துபட்ட வாய்ப்புக்கள் காணப்படுவதை கண்டறிந்துள்ளேன்

## இலங்கை குறித்து வியட்நாம் ஜனாதிபதி புகழாரம்

(கொழும்பு)

**வியட்நாம் தன்வசம் கொண்டுள்ள பொருளாதாரம் சார் எந்தவொரு அனுபவத்தையும் இலங்கையுடன் நேரடியாக பகிர்ந்து கொள்வதற்கு தயாராகவுள்ளது என்று வியட்நாமிய ஜனாதிபதி ட்ராங்டேன் சாங் தெரிவித்துள்ளார்.**

வியட்நாம்: இலங்கை வர்த்தக ஒன்றுகூடல் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இலங்கைக்கு வருகை தந்துள்ள வியட்நாம் ஜனாதிபதி ட்ரோங்டேன் சாங் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந் நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் வியட்நாம் பிரதிப்பிரதமர் நேகியு பென் எக்ஸூ அன் ஹுக் மற்றும் இரு நாடுகளின் வர்த்தகத்தூதுக்குழுவினரும் கலந்து கொண்டனர்.

அங்கு இலங்கைக் தூதுக்குழுவினரால் கேட்கப்பட்டகேள்விகளுக்குபதிலளித்தவியட்நாம் ஜனாதிபதி தொடர்ந்து உரைநிகழ்த் துகையில்,

இலங்கையும் வியட்நாமும் நீண்டகால உறவினை கொண்டுள்ள நாடுகளாகும். பல் வேறு விடயங்களில் எமது இரு நாடுகளும் ஒத்திசைவான தன்மைகளைக் கொண்டுள்ளன. இந் நிலையில் வியட்நாம் வர்த்தக தூதுக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்து இங்கு உள்ள வர்த்தகப்பிரமுகர்களை சந்தித்துள்ளனர். அது மாத்திரமன்றி இலங்கை தன்வசம் கொண்டுள்ள உள்ளார்ந்த வர்த்தக வாய்ப்புக்கள் குறித்தும் கண்டறிந்து கொள்வதற்கு இப்பயணம் சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

இம்முயற்சி இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை பயப்பதாக அமைவதுடன் இது போன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படவேண்டும்.

வியட்நாம் யுத்தம் முடிவடைந்த பின் அதன் பாதிப்புக்களிலிருந்து விடுபட்டு அபிவிருத்திப்பாதையில் பயணிக்கும் விடயத்தில் எமது நாடு பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. அரசியல் உள்ளிட்ட பொறிமுறைகளில் ஸ்திரத்தன்மை யின் அவசியம் உணரப்பட்டது.

ஆனால் அவ்வாறான தடைகளைத் தாண்டி இன்று வியட்நாம் வளர்ச்சிப்பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

இலங்கையில் பரந்துபட்ட வாய்ப்புக்கள் காணப்படுவதை நாம் கண்டறிந்து கொண்டுள்ளோம். எரிவாயு ,எண்ணெய் விவசாயம் போன்ற துறைகளில் மட்டுமல்லாது மீன்பிடி உள்ளிட்ட வர்த்தக முயற்சிகளிலும் உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இது தொடர்பான இருபக்க கலந்துரையாடல்களை நாம் மேற்கொண்டுள்ளோம். இலங்கையிலும் வியட்நாமிலும் காண ப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து தொடர் ந்து ஆராயவேண்டியுள்ளது. ஒரு சில துறைகளை விட வேறுசில துறைகளில் கூடிய கவனத்தை செலுத்தவேண்டியது அவசியமானது என்கிறார். (4-2)

## சுவாச இயந்திர உதவியின்றி சுவாசிக்கிறார் துமிந்த சில்வா

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா செயற்கை சுவாச உபகரணங்களின் உதவியின்றி சுவாசிக்க ஆரம்பித்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துமிந்த சில்வாவுக்கு பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாச உபக்ரணம் அகற்றப்பட்டதாக அவருக்கு சிகிச்சைகளை மேற்கொண்ட வைத்தியசாலையின் நரம்பியல் விசேட நிபுணர் டாக்டர் மகோசி விஜயரத்தின தெரிவிக்கிறார்.

துமிந்த சில்வாவுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் பின்னர் அவரின் உடல் நிலை தேறி வருவதாகவும் நேற்று முன்தினம் அவருக்கு அவ்வப்போது சுயநினைவு திரும்பியதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின்போது அகற்றப்பட்ட மண்டையோட்டின் ஒரு பகுதியை மீள ஒட்ட வைப்பதற்கான மற்றுமொரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதாக நரம்பியல் விசேட நிபு ணர் டாக்கடர் மஹோஷி விஜேரத்ன மேலும் தெரிவிக்கிறார். (4-2)

# பயணிகளை ஏற்றி இறக்குவதில் பேருந்துகளிடையே போட்டி

## சாரதி காயம், வாகனம் சேதம்

(மல்லாவி)

பயணிகளை ஏற்றி இறக்குவதில் ஏற்பட்ட போட்டியில் தனியார் பேருந்து சாரதியால் இ.போ.ச. பேருந்து சாரதி தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் முள்ளியவளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.40 மணிக்கு முள்ளியவளையில் இடம்பெற்றுள்ளது. இதில் இ. போ. ச. பேருந்தின் கண்ணாடி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது, வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட இ.போ.ச பேருந்தும் துணுக்காயிலிருந்து முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட தனியார் பேருந்தும் மாங்குளம் சந்தியில் சந்தித்த போது ஏற்பட்ட போட்டியில் முள்ளியவளை வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் பி.கோபாலகிருஷ்ணன் (வயது 28) என்ற இ.போ.ச. பேருந்துச் சாரதியே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் தொடர்பாக இ.போ.ச பேருந்து சாரதியால் முல்லைத்தீவு பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தனியார் பேருந்து சாரதியான சி.மனோகரன் என்பவரையும் மற்றும் நடத்துநரையும் கைது செய்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.ஜெயபிரபாகரன் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்ததுடன் தனியார் பேருந்து சாரதியையும் நடத்துநரையும் அனுராதபுர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-3-15)

# பாரத லக்ஸ்மன் முதலில் துமிந்த மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார்

## சட்டத்தை மீற உரிமை கிடையாது என்கிறார் மகிந்த

(கொழும்பு)

கொலன்னாவையில் பாரத லக்ஸ்மன் பிரமேச்சந்திரவே முதலில் துமிந்த சில்வா மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற முக்கிய அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை தொகுதியில் எந்தவொரு அரசியல் பொறுப்புகளும் பாரதவிற்கு கொடுக்கப்படவில்லை. அது தொடர்பான பொறுப்புகள் கட்சியினால் துமிந்த சில்வாவிற்கே வழங்கப்பட்டிருந்தன. அதில் தலையிட்டமை தொடர்பாக பல தடவைகள் பாரதவை நான் கடுமையாக கடிந்து கொண்டேன்.



அவர் எனக்கு தொழிற்சங்க இணைப்பாளராக செயற்படுவது தவிர எந்தவொரு கட்டத்திலும் சட்டத்தை கையில் எடுத்திருக்கக் கூடாது. துமிந்த சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டாலும் அதனைக் தடுக்க பாரதவிற்கு அதிகாரம் கிடையாது.

அத்துடன் துமிந்தவை விரட்டிச் சென்று மோதலை ஏற்படுத்திக் கொண்டது பாரத தானே தவிர துமிந்தவுக்கு இதில் பொறுப்பில்லை.

தவிரவும் அவர்கள் இருவர் இடையிலும் மோதலை தூண்டிவிட்டது இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் (திலங்க சுமதிபால) தான். அவர் மீது மிக விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதன் போது ஜனா திபதி மேலும் தெரிவித்துள்ளார். (4-2)

# இலங்கையின் பொருளாதாரம் 8 வீதத்தால் உயர்ந்துள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஒரே கொடியின் கீழ் இலங்கையில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட தான் தயாராக உள்ளதாக ஜனாதிபதி மஹி ந்த ரா்ஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடமாக இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்து நாடு தற்பொழுது ஸ்திரமான நிலையை அடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

இலங்கை தற்போது 8 வீதம் பொருளாதார வளர்ச்சியுடன் மிக வேகமான அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

அதனூடாக இலங்கை பிரஜைகளுக்கு மாத்திரமின்றி வேறு நாடுளைச் சார்ந்தவர்களுக்கும் இலங்கையில் முதலீடுகளை செய்ய சிறந்தவொரு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள வியட்நாம் ஜனாதிபதி ராங்டேனுக்கு நேற்று முன்தினம் இரவு வழங்கப்பட்ட இராப்போசன விருந்தின் போதே ஜனாதிபதி இக் கருத்துக்களை முன்வைத்தார். (4-2)

# லியாம் பொக்ஸின் நண்பருக்கு இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு

இஸ்ரேலுடன் தொடர்புடைய நிதியாளர்கள் மற்றும் தனியார் புலனாய்வு நிறுவனம் என்பனவே பிரித்தானிய முன்னாள் பாதுகாப்பு செயலாளர் லியாம் பொக்ஸின் நண்பர் அடம் வெரிட்டிக்கான பயண செலவுகளை வழங்கி வந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெரிட்டியால் ஆரம்பிக்கப்பட்ட இந்த தனியார் பாதுகாப்பு நிறுவனத்தினால் லியாம் பொக்சுடன் வெளிநாட்டு விஜயங்களை மேற் கொள்வதற்கு 147 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை வெரிட்டியால் தனியார் பாதுகாப்பு நிறுவனம இலங்கை மற்றும் இஸ்ரேலின் சொத்து முதலீட்டாளர்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தமை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

லியாம் பொக்ஸ் உத்தியோகபூர்வமா கவோ உத்தியோகபற்றற்ற ரீதியிலோ அவரது நண்பரை எந்த பதவியிலும் நியமிக்கவில்லை. எனினும் நண்பரான வெரிட்டி தமது சொந்த தொடர்பு அட்டையில் லியாம் பொக்சின் ஆலோசகர் என்றும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் லியாம் பொக்சுடன் சுமார் 18 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் கடந்த வருடம் லியாம் பொக்சும் அவரது நண்பரும் லண்டன் மன்டாரியன் ஒரியன்டல் ஹோட்டலில் இடம்பெற்ற நிதிச் சேகரிப்பு இரவு போசன நிகழ்வு ஒன்றில் அதிதிகளாக பங்கேற்றதாக டெய்லி டெலிகிராப் தெரிவித்துள்ளது. (4-2)



யாழ்.சண்டிலிப்பாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர் களுக்கு கணனிக் கற்றலிற்கான கணனிகள் மற்றும் அச்சியந்திரம் என்பன பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவால் அண்மையில் வழங்கப்பட்டது. இதில் மானிப்பாய் பிரதேச ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பொறுப்பாளர் அன்ரன் வெலிசோர் ஜோன்சன்,பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் ஆகியோர் கணனிக் கற்கை நெறிகளை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

12


தமிழருவி மணியனின் அதிரடித் தொடர்





உலகில் ஆறாயிரம் மொழிகள் பேசப்படுவதாகவும் காலநடையில் பலமொழிகள் வழக்கழிந்து போவதாகவும் மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த ஆறாயிரம் மொழிகளுள் ஆறுமொழிகளே உயர்தனிச் செம்மொழிகள் என்று போற்றப்படுகின்றன. லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு,சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகியவையே அந்த உயர்ந்த பெருமைக்கு உரியவை. இப்போது லத்தீன் பேச்சு வழக்கில் இல்லை. கிரேக்கம் வழக்கழிந்து மீண்டும் மறுவுயிர்ப்பைப் பெற்றிருக்கிறது. ஹீப்ரு மொழியிலிருந்து பிறந்த இவ்ரித் மொழியையே இன்று இஸ்ரேலியர்கள் பேசுகின்றனர்.

சமஸ்கிருதம் தெய்வமொழியாகி மனிதர்கள் பேச முடியாமல் மரித்துப் போனது. சீனமும் தமிழும் மட்டுமே இடையறாமல் இன்றுவரை மக்கள் நாவில் நடமிடுகின்றன. நாளைய தமிழுக்கு என்ன நேரும்? பாரதி அஞ்சியது போல் மெல்லத்



தமிழ் இனிச் சாகக் கூடும்.

இன்றுள்ள தமிழனுக்கு முதலில் தமிழ் பேசுவது அவமானமாகப் பட்டது. அடுத்து தமிழில் படிப்பது அவமானமாகத் தோன்றியது. இன்று தமிழனாக இருப்பதே அவமானமாக மாறிவிட்டது. நம் கல்லூரிப் பிள்ளைகள் **டுமாரோ ஈவினிங் சிக்ஸ் ஓ கிளாக்ஃ? பங்ஷன்ல மீட் பண்ணுவோம்** என்று பேசித்தான் கன்னித் தமிழைக் கற்பழிக்கிறார்கள். ஆங்கிலச் சொல் இல்லாமல் ஒரு வாக்கியத்தைக்கூட முழுமையாகத் தாய்மொழியில் இந்த அறிவுஜீவிகளால் பேசமுடிவதில்லை. **தமிழ் படித்தால் சோறு போடுமா?** என்று ஏளனக் குரலில் கேள்வி கேட்கிறார்கள்.

தாய்மொழியை வெறும் சோற்று மொழியாகச் சிந்திப்பதே அருவருப்பானது. மொழியின்றி இனமில்லை. இனவுணர்வின்றி பண்பாட்டு வளர்ச்சிக்கு வேறு வழியே இல்லை. உலகில் வாழும் 600 கோடி மக்களில் நமக்கென்று ஓர் தனித்த அடையாளத்தைத் தேடித் தருவது தான் தாய்மொழியின் சிறப்பு. கடலில் கலக்கும் எந்த நீர்த்துளிக்கு தனித்துவம் உண்டு? மானுட சமுத்திரத்தில் நாம் அடையாளம் இழந்துவிடாமல் நமக்கென்று தனியாக ஒரு முகத்தையும் முகவரியையும் தருவது தான் நாம் பேசும் நல்ல தமிழ் என்பதை இன்றைய தலைமுறை உணரவேண்டும்.




தமிழ் பேசுவது தற்குறித்தனம்: நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுவது தான் அறிவின் அடையாளம் என்று நாம் நினைக்கத் தொடங்கிவிட்டோம். ஆனால், ஆங்கிலத்தில் எழுதுவதை விட லத்தீன் மொழியில் எழுதுவதுதான் உயர்வு என்று கருதிய பிரான்சிஸ்பேகன் இங்கிலாந்தில் பிறந்தவன் என்பதை நாம் அறிவோமா? ஆங்கிலக் கால்வாய் இடையில் இல்லாவிட்டால் இங்கிலாந்தும் பிரான்சும் ஒரே நிலப் பரப்பாக இருந்திருக்கும். பிரான்சில் இன்றுவரை ஆங்கிலத்திற்கு இடமில்லையே. ஆங்கிலம் **உலகமொழி** என்கிறோம். ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இந்த ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு குப்பை கூடக் கொட்ட முடியாது என்பதை நேரில் சென்று பார்த்த என்னைப் போன்றவர்கள் நன்கறிவார்கள்.

இரண்டாவது உலகப் போர் நடந்தபோது ஹிட்லரின் அமைச்சர் கோயபெல்ஸ் **ஆங்கிலேயரிடம் நாம் தோற்றுவிட்டால் மிகக் கடினமான ஆங்கிலம் நம்மீது திணிக்கப்படும்** என்று அச்சமூட்டினான் என்பது வரலாறு. **நம் தாய்மொழி உயிர்வாழும் வரை நாட்டுக்கு அழிவில்லை** என்பது செக்கோசிலாவகியரின் ஆழ்ந்த நம்பிக்கை. மொழியைப் புறந்தள்ளும் இனத்தின் ஒருமைப்பாடும் பண்பாடும் நாகரிகமும் நிச்சயம் நலிவுறும் என்பது மாற்றமில்லாத உண்மை.

தாய்மொழி வழியாகக் கல்வியைப் பெறும்போதுதான் கற்பனைத் திறனும் படைப்பாற்றலும் பெருகும்

## இன்றுள்ள மனிதனுக்கு தமிழ் பேசுவதும் படிப்பதும் அவமானமாக தோன்றுகிறது

என்பது காந்தியப் பார்வை. அதுவே விவேகானந்தர் முதல் பாரதி வரை எடுத்து வைத்த கருத்து. அறிவியல் கண்டுபிடிப்புகள் அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், இஸ்ரேல், ஜப்பான் போன்ற நாடுகளில்தான் அதிகம். அதற்குக் காரணம் அவரவர் தாய்மொழியில்தான் பெறும் கல்வியே. நம் பிள்ளைகள் அறிவுக் கூலிகளாக இருக்கிறார்களே தவிர புதிய கண்டுபிடிப்பாளர்களாகப் பரிணமிக்கவில்லை. இவர்களுடைய நேரம் ஆங்கிலத்தோடு போராடுவதிலேயே போய்விடுகிறது.

மருத்துவம், பொறியியல், சட்டம் போன்றவற்றைக் கற்பிக்க நம் தமிழனால் ஆகாது என்றுரைப்பது தகாது. ஒரு பூ பூத்து உதிர்வது வரை உள்ள ஏழு நிலைகளை அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் என்று பகுத்துப் பதங்களைத் தந்தது தமிழ்.

மலர்வது மலர். முற்றும் மலர்ந்து விரிந்தால் அலர். வாடத்



தொடங்கினால் வீ. வாடி உதிர்ந்தால் செம்மல் என்று எந்த மொழியால் சொல்ல முடிந்தது? உத்தரப் பிரதேச உயர்நீதிமன்றத்தில் இந்திக்கு இடமுண்டு. சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழ் இன்றும் தாழ்வாரத்தில்தான் தலை குனிந்து நிற்கிறது. ஏன் இந்த அநீதி? **வழக்கு மன்றங்களில் மக்களுக்குப் புரியாத மொழியில் விவகாரம் நடப்பதால் குருடன் கூத்துப் பார்த்த கதையாய் முடிகிறது** என்றார் முன்சீப்பாக இருந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

**என்னுடைய வாழ்க்கையில் எதற்காகவாவது நான் கவலைப்பட வேண்டும் என்றால், உயர்ந்த தமிழ் மொழியைக் கற்க முடியாமற் போனதற்கு மட்டும்தான்** என்றார் மகாத்மா. **தாய்மொழியே ஒவ்வொரு மனிதனின் மனம் பேசும் மொழி** என்றார் கோல்ரிஜ். **ஒவ்வொரு பறவைக்கும் தன் கூடே தனியழகு** என்ற உண்மையை எப்போது நாம் உணரப் போகிறோம்?



(ஞாயிறு பொறிபறக்கும்)

# வரவு-செலவு திட்டத்திற்கு முன்னர் தேர்தல் சட்டமூலம் நிறைவேறும்

## ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை துரிதமாக நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு முன்னர் அதனை நிறைவேற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், முல்லேரியா சம்பவத்தின் மூலம் தேர்தல் முறையிலும் மாற்றம் வேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

தேர்தல் முறையை மாற்றுவதற்கான காலம் எழுந்துள்ளது. உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது வாசிப்பு முடிவடைந்துள்ளது. சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என கோரப்பட்டுள்ளதால் அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சகல கட்சிகளினதும் இணக்கத்துடன் வரவு-செலவு திட்டத்திற்கு முன்னர் இதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது வரவு-செலவு திட்டத்தின் பின்னர் துரிதமாக அதனை நிறைவேற்றுவோம். (4-2)

# சனத்தொகை கணக்கெடுப்பு டிசம்பரில் நடத்த ஏற்பாடு

## குடிசன மதிப்பீட்டு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் அளவில் சனத்தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு வீடு மற்றும் கட்டட கணக்கெடுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அத் திணைக்களம் குறிபிட்டுள்ளது.

இதன்படி மூன்று வாரங்களுக்கு சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்பின்னர் மூன்று நாட்களுக்குப்பின் மீண்டும் அவை பரிசீலிக்கப்படும். கடந்த 2001 ஆம் ஆண்டு இலங்கையில் இறுதியாக சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில் இம்முறை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கி நாடு முழுவதுமான சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. (4-2)

# தேர்தல் பிரசாரத்தின் போது அறுபது இலட்சம் ரூபா செலவிடப்படவில்லை

## மறுக்கிறது கிளர்ச்சிக்குழு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்தோ அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்தோ தமக்கு எந்த நிதியும் கிடைக்கப் பெறுவதில்லை என்று ஜே.வி.பி.யின் கிளர்ச்சியாளர்கள் குழு ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் ஒரு பிரிவே தமது பிரசார நடவடிக்கைகளுக்காக நிதி வழங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி.யின் கிளர்ச்சியாளர் குழுவுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நிதி வழங்கியதாக சிங்கள ஊடகங்கள் செய்தியை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் கிளர்ச்சிக்குழு தமது பிரசார நடவடிக்கைகளுக்காக இதுவரையில் 60 இலட்சம் ரூபாய்களை செலவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் இதனை ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக்குழு உறுப்பினர் புபுது ஜயகொட ஜே.வி.பி.யினால் இவ்வாறான பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சுமத்தினார். (4-2)

## மின்னியலாளர் இலவச பயிற்சி

தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) வரை கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகயன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இல. பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றை குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்டமுகாமையாளர், NAITA, இல. 7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)



தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 20:20 மற்றும் 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி கழக் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் 20 இற்கு 20 கிரிக்கெட் போட்டியில் சம்பியனாகிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணித் தலைவர் எஸ். கிருபாகரனுக்கு பருத்தித்துறை நகர சபையின் செயற்குழுத் தலைவர் சட்டத்தரணி சபாரவீந்திரனின் பாரியார் வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்:-எஸ்.செல்வதீபன்)*

# நீதிமன்றில் ஆஜராக தவறிய பொலிஸ் அத்தியட்சகர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

சாட்சியத்தின் ஏற்புடைமை பற்றிய வழக்கொன்றில் பிரதம சாட்சியான பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜராகத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டு ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு வரத் தவறிய உதவி பொலிஸ் அத்தியட்சகரை நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். எல்.ரி.ரி.ஈ.யுடன் தொடர்பிருந்ததாக சந்தேகிக்கப்பட்ட தியாகராஜா மோகன்ரூபன் பயங்கரவாத புலனாய்வு பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலம் சுய விருப் பின் பேரில் வழங்கப்பட்டதா அல்லது நிர்ப் பந்தத்தின் பேரில் வழங்கப்பட்டதா என தீர் மானிப்பதற்கான விசாரணைக்கு வரவில்லை என்பதே மேற்படி உதவி பொலிஸ் அத்தியட்சகர் மீதான குற்றச்சாட்டாகும்.

இவ்வழக்கு கடந்த 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி உதவி பெரலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றுக்கு வந்திருந்தார். அப்போது அவர் 7 ஆம் திகதி விசாரணைக்கு வரத்தவறியமை கவனத்திற்கொள்ளப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அடுத்த விசாரணை எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (4-2)

# ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் மீது அழுத்தங்களை பிரயோகித்தனர்

## முல்லேரியா சம்பவம் குறித்து கபே தெரிவிப்பு

(கொழும்பு)

கொலன்னாவை பிரதேசத்திற்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் விடுத்த உத்தரவை பொலிஸார் நிராகரித்ததாகவும் இது தேர்தல் தினத்தன்று வருந்தத்தக்க சம்பவங்கள் ஏற்பட வழிவகுத்ததாகவும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் கபே தெரிவித்துள்ளது.

கொலன்னாவைப் பகுதியில் பதற்றம் அதிகரிப்பதாக பல புகார்கள் கிடைத்ததை யடுத்து அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பணித்திருந்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார்.

கடுல்ல, வதுல்வத்த, ஜனசபா, களனிபுர மற்றும் கம்பிகொட்டுவ உட்பட பல பகுதிகளின் வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் மீது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் முறையற்ற அழுத்தங்களை பிரயோகித்ததாகவும் தேர்தல்கள் ஆணையாளரால் அனுப்பப்பட்ட அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வாக்குகளை எண்ணுவதற்கு முன்னர் இவ்விடயத்தை கருத்திற்கொள்ளுமாறும் தெரிவத்தாட்சி அதிகாரியை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பணித்திருந்தார். இந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருந்தால் முல்லேரியா சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என கீர்த்தி தென்னக்கோன் கூறினார். (4-2)

# அவுஸ்திரேலியாவின் அகதி பரிமாற்ற திட்டம் கைவிடப்பட்டது-ரொய்ட்டர்ஸ்

(கொழும்பு)

இலங்கை தமிழர்கள் உள்ளிட்ட அகதிகளை அவுஸ்திரேலியாவில் இருந்து மலேசியாவுக்கு மாற்றும் திட்டம் முழுமையாக கைவிடப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இந்த திட்டம் உகந்தது இல்லை என்று அவுஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து சில திருத்தங்களுடன் இந்த திட்டத்தை அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் முன்வைத்து அதன் அடிப்படையில் அதனை முன்னெடுக்க அவுஸ்திரேலிய பிரதமர் ஜுலியா கில்லார்ட் முயற்சித்தார்.

எனினும் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் போதிய ஆதரவு கிடைக்காததைத் தொடர்ந்து இந்தத் திட்டம் முற்றாக கைவிடப்பட்டது.

எவ்வாறாயினும் அகதிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அகதி பரிமாற்றத் திட்டமே சிறந்தது என்று ஜுலியா கில்லார்ட் மீண்டும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் 4 ஆயிரத்து 427 ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட ஏனைய நாட்டு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் 811 அகதிகள் தங்கியுள்ளனர். (4-2)

## தமிழக மீனவர் பிரச்சினையை கட்டுப்படுத்த

# இலங்கை - இந்திய கடற்படையினர் கூட்டுக் கண்காணிப்பில் ஈடுபட முடிவு

(கொழும்பு)

இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் இந்திய கடற்படையினர் சர்வதேச கடற்பரப்பில் கூட்டுக் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

ரைம்ஸ் ஒப் இந்தியா இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றின் போது இலங்கை இந்திய கடற்படையினர் விரிவாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கண்காணிப்பதற்கான கண்காணிப்பு குழு ஒன்றை நியமிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ரஞ்சன் மத்தாய் இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கையில் பேச்சு நடத்தியிருந்தார். (4-2)


# குருவின் பார்வையில்



## ஆன்மீகம் 04

### அன்பாயிருத்தல்

அன்பாக இருக்க வேண்டும் மற்றவர்களை நேசிக்க வேண்டும் என்ற போதனை தொடர்ந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் பலராலும் இந்த அன்பை உணர முடிவதில்லை. ஏனென்றால் அன்பு என்பது மற்றவர் அளிக்கும் போதனையால் வருவதில்ல. உங்கள் அனுபவத்தில் 'நான்' என்பது உடல், மனம், உணர்ச்சி, இவைகளுக்கு அடிப்படையான உயிர் சக்தி. இந்த



உயிர் சக்தி என்பது உங்கள் உணர்வில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உடல், மனம், உணர்ச்சிகள் இவை செயல்பட அடிப்படையாக ஒரு சக்தி உங்களுக்குள் இருக்கிறது. இந்த நாலு தன்மைகளையும் சேர்த்துத் தான் 'நான்' என்ற தன்மையை உருவாக்கியிருக்கிறீர்கள். உடல் நிலையை ஒரு சுகமான, இனிமையான நிலையில் வைத்திருந்தால் அதனை ஆரோக்கியம இன்பம் என்கிறோம். மன நிலையில் ஒரு இனிமையான நிலையிருந்தால் இதனை மகிழ்ச்சி என்கிறோம். உணர்ச்சி நிலையில் இனிமையான நிலை நிலவினால், அதனை, அன்பு, நேசம் என்கிறோம். உயிர்ச் சக்தி நிலையில் இனிமையான நிலை ஏற்பட்டால், பேரானந்தம் என்கிறோம்.

அன்பு என்பது மற்றவருடன் தொடர்புடைய விடயமல்ல. நமது உணர்ச்சியை இனிமையான நிலையில் வைத்திருந்தால், அதை அன்பு என்கிறோம். இதற்கு இன்னொருவரின் உதவி தேவையில்லை. ஆனால், தற்போது இன்னொருவரின் உதவியை உபயோகப்படுத்தி, இன்னொருவரைத் தூண்டுகோலாக்கி அன்பை உணர்வதால், இன்னொருவர் இருந்தால் மட்டுமே அன்பை உணர முடியும் என்ற தவறான கருத்து மனிதனின் மனதில் வந்துவிட்டது. தற்போது உங்கள் அருகே நீங்கள் மிகவும் நேசிக்கும் ஒரு மனிதர் அமர்ந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர்மீதான அன்பை நீங்கள் உங்களுக்குள் உணருகிறீர்கள். சற்று நேரத்தில் அவர் எழுந்து சிறிது தூரம் சென்றுவிட்டால், இப்போதும் நீங்கள் இருக்குமிடத்திலிருந்தே அவர் மீது அன்பாயிருக்க முடியும். அவர் 10 மைல் தூரம் சென்றிருந்தாலும் உங்களுக்குள் அன்பை உணர முடியும். அவர் இல்லாமல் போய் விட்டாலும்கூட அவரை நினைத்து உங்களுக்குள் நீங்கள் அன்பாய் இருக்க முடியும்.

எனவே, அன்பு என்பது உங்களுடைய தன்மை. ஆனால், அந்தத் தன்மை உங்களுக்குள் திறந்து கொள்ளை மற்றொருவரை ஒரு சாவியாக, ஒரு தூண்டுதலாக உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள். அப்படியானால், உங்களுக்குள் உள்ள அன்பை வேறொருவர் தள்ளிவிட்டு இயக்க வேண்டியுள்ளது. முன் காலத்தில் நீங்கள் ஒரு கார் வாங்கினால், அவற்றோடு இரண்டு வேலையாட்களையும் நியமித்தாக வேண்டும். ஏனென்றால் அவர்கள் காரைத் தள்ளிவிட்டால் தான் அது ஓடத் தொடங்கும். ஆனால், இப்பொழுதெல்லாம் கார்கள் தானியங்கியாகி விட்டன. அதேபோல உங்கள் அன்பு, ஆனந்தம் எல்லாம் தானியங்கியாக இருக்க வேண்டும். இந்தத் தன்மைகளை நமக்குள்ளேயே உருவாக்கிக் கொள்ளும்போது யார் இருந்தாலும் இல்லையென்றாலும் நாம் நம்முள் அன்பாயிருக்க முடியும். இன்னொரு மனிதன் இருந்தால், அவரோடு பகிர்ந்து கொள்ளலாம். இல்லையென்றாலும் நமக்குள் நாமே அன்பாய் இருக்க முடியும்.


நம் உணர்ச்சி நிலை மென்மையான, சுகமான நிலையிலிருந்தால், அன்பு என்றும், கடினமான நிலையிருந்தால் கோபம் வெறுப்பு, பொறாமை என்றும் கூறுகிறோம். எனவே நம் உணர்சிகளை இனிமையான நிலை நிலையில் வைத்திருப்பது எப்படியென்று பார்க்க வேண்டியுள்ளது. நாம் வெளியிலுள்ள ஒரு மனிதனை அன்பிற்கென உபயோகப்படுத்தும் போது அந்த மனிதனுக்குள் நடக்கும் பலவிதமான மாற்றங்கள், போராட்டங்கள் நமக்குள்ளும் நிகழும். பலருக்கும் அன்பு என்பது தொடக்கத்தில் ஒரு விளையாட்டாகவும், மகிழ்ச்சியானதாகவும் இருந்தாலும் காலப்போக்கில் ஒரு பதற்றமாக உருமாறியிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் யாரோடு அன்பாயிருக்கிறீர்களோ அந்த மனிதருக்கு என்ன நேருமோ என்ற கவலை வாழ்க்கை முழுதும் தொடர்கிறது. எனவே அன்பு என்ற தன்மை மகிழ்ச்சியற்றதாக, அமைதியற்றதாக மாறிவிடுகிறது. அன்பை வெளியே தேடும்போது அது எப்போதுமே பிரச்சினையை உருவாக்குகிறது. நீங்கள் அன்பாயிருக்க முயற்சிக்க வேண்டியதில்லை. உங்கள் உடல், மனம், உணர்ச்சி, சக்தி இவற்றை இனிமையான நிலைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பதை அறிந்து கொண்டால், எப்போதுமே அன்பாய் தான் இருப்போம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மட்டக்களப்பின் ஓவியச் செயற்பாட்டில் ஓவியர் வாசனின் வெளிப்பாடுகள் 05

கலைப்படைப்பின் இலட்சணம் அழகியல் சார்ந்த படைப்பாக்கத் திறன், படைப்பாளியின் கருத்தியல் தெளிவு இந்த இரண்டு அம்சங்களும் சீராக இணையும்போதே அக்கலைப் படைப்பு முழுமை பெறுகிறது. இந்த வகையில் முழுமைபெற்ற ஓர் ஓவியக்கலைஞனாக வாசன் நம் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கிறார். ஓவியம் குறித்த மிகுந்த தேடலுடனும் செயற்பாட்டுடனும் தன்னை



வளர்த்துக் கொண்டு தன் படைப்புக்களுக்கு உயிரோட்டம் அளித்து ஓவியக்கலை வரலாற்றில் தனக்குரிய தடத்தினை பதித்தவராக ஓவியப் பயணத்தைத் தொடர்ந்து வருகிறார்.

அண்மைக் காலத்தில் கலப்பு ஊடகங்களைப் பயன்படுத்தி கருவாடு என்ற தலைப்பில் அவர் படைத்துள்ள ஓவியத்தொடர்களும் இவராது படைப்பாளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இன்றைய சூழலில் வாழ்கின்ற ஒவ்வொரு மனுதரும் தமது உண்மையான உள் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள முடியாதவாறு வாழும் நிலையில் ஓர் ஓவியக் கலைஞனாக தனது மன உணர்வுகளின் தன்மைகளை இவர் தனது கருவாடு, புழுதி ஓவியங்களினூடாக வெளிப்படுத்தி வருகின்றார். மனிதரும் மனித உயிரும் மதிப்பிழந்து போய்விட்ட இந்த உலகத்தின் அவலத்தை கருவாடு எனும் ஓவியத் தொடர் வெளிக்காட்டி நிற்கிறது. கருவாடுகள் பரப்பி வைக்கப்படும் பூமியாக உலகம் மாறுவதன் துயரத்தையும் அபாயத்தையும் தான், உணர்ந்து மற்றையோருக்கும் உணர்த்தி நிற்கிறார் வாசன்.

மனித உயிர் பறிப்புக்கள் நியாயம் கற்பிக்கப்பட்டும் மனித உயிர் அழிப்புக்கள் வெற்றியின் சின்னங்களாக கொண்டாடப்பட்டும் மனித உயிரிழப்புக்களின் எண்ணிக்கை கூறுதல், ஊடகங்களின் விற்பனைக் குரிய பிரதான செய்திகளாக முக்கியப் படுத்தப்பட்டும் வரும் இன்றைய உலகச் சூழலில் உயிரற்ற பெறுமதிமிக்க கருவாட்டுக் கூறுகளைக் குறித்து இவரது ஓவியங்கள் படைக்கப்பட்டுள்ளமை காலத்தின் மீது கொண்ட கோபத்தையும் வெறுப்பையும் அருவருப்பையும் மௌனமாகப் பகிர்ந்து கொள்ள வைத்துள்ளது.

ஓவிய உருவாக்கத்தின் பின்னாலுள்ள தனது உணர்வுகளை பின்வருமாறு கூறுகின்றார். ஆரம்ப் பிரிவில் கற்கும் நாட்களில் பாடசாலைக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று, அறுவடை முடிந்த வயல் வெளி, அதற்குள் தனியாக நிற்கும் ஆலமரம், தூரத்தில் தெரியும் களிமண் எடுக்கும் இடம், அதற்கு அடுத்துள்ள சவக் காலை இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து இருக்கின்ற நிலப்பரப்பு ஏற்படுத்துகின்ற அரூபத் தன்மையானதும் அருவருப்பானதும், அச்சத்திற்குரியதும், புலக்காட்சிகள் நிலை பெறாமல் போனதுமான சிறுபராய அரூப அனுபவத்துடன் சமகால வாழ்வியல் அனுபவங்களை இணைக்கின்றபோது அதே நில

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

வெளிக்குள்ளிருந்து புழுதி படிந்த ஓவியங்கள் முளைப்பது போல் உணர்கின் றேன் என்கிறார்.

இவ்வகையில் ஈழத்தமிழராகிய நாம் எதிர்கொண்ட முப்பது வருட கால கடும் போரும் அதனால், ஏற்பட்ட காயங்களும் வடுக்களும் ஓவியரின் உணர்வு நிலைகளில் ஏற்படுத்திய தாக்கமும் கொடுமைகளை உள்வாங்கி வெளிப்படுத்திய விதமும் நுகர்வோரை ஓவியனுக்கு அண்மையில் கொண்டு சென்று



நிறுத்துவதாக உள்ளது.


முடிவுரை

வாழ்க்கை வெளியும் அதனைச் சூழவுள்ள எல்லைகள் வியாபிக்கின்றன அழுத்தங்களையும் மற்றும் முறைமுகமாக சமகால சமூகத்தின் மாற்றம் தேவை, அரசியல் நிலைப்பாடுகள் போன்றவற்றையும் வாசனது ஓவியங்கள் முதன்மைப் படுத்தி நிற்கின்றன.

விஜயபிறைளபி

(முற்றும்)

# பீபள்ஸ் லீசிங் கம்பனியின் ரூ.7 பில்லியன் ஐ.பி.ஓ அறிவிப்பு



இலங்கையின் லீசிங் துறையில் முன்னணியில் திகழும் பீபபிள் லீசிங் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (PLCL) இதுநாள்வரை காத்திருந்த ஆரம்ப பொது வழங்கல்(IPO) தொடர்பாக அறிவித்துள்ளது.

ரூபாய் 7 பில்லியனை திரட்டும் நோக்குடன் தலா ரூ.18 பெறுமதியான 390 மில்லியன் சாதாரண பங்குகளை வெளியிடுவதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் விநியோகிக்கப்பட்ட மற்றும் கொடுப்பனவு வழங்கப்பட்ட சாதாரண பங்குகள் 25 வீதம் பெறுமதியுடையதாக புதிய பங்குகள் இருக்கும். எதிர்வரும் நவம்பர் 3-ம் திகதி ஆரம்ப பொது வழங்கல் மேற்கொள்ளப்படவுள்ளது.

தீவிரமாக விரிவாக்கம் அடைந்து வரும் லீசிங் நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்காளர்களாகுவதற்கு முதலீட்டாளர்களுக்கு இது அரிய சந்தர்ப்பமாகும்.

நாட்டில் வேகமாக முன்னேறி வரும் லீசிங் நிறுவனங்களில் ஒன்றான பீப்பிள் லீசிங் நிறுவனம் 20இற்கும் மேற்பட்ட தெளிவான சந்தை பங்குகளுடன் சந்தையில் முன்னணியில் இருப்பதனை எவராலும் மறுக்கமுடியாது. அடுத்த தசாப்தத்தின் அதிஉன்னத வளர்ச்சியினை அடைவதற்கான ஆற்றலை இந்த நிறுவனம் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் எமது இலட்சிய வளர்ச்சித் திட்டங்களில் எமது இயலுமையை வலுப்படுத்தும் அதே வேளை எங்கள் பங்குதாரர்களின் பெறுமதியை விரிவாக்குவதற்கு இந்த ஐ.பி.ஓவுக்கு தனிப்பட்ட மற்றும் நிறுவன முதலீட்டாளர்கள் மத்தியில் இருந்து சிறந்த வரவேற்பு கிடைக்கும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன் என நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே தெரிவித்தார்.

இந்த ஐ.பி.ஓவினை வரையறுக்கப்பட்ட என்.டி.பி.முதலீட்டு வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட கப்பிட்டல் அலையன்ஸ் கோல்டிங்ஸ் என்பன இணைந்து முகாமை செய்கின்றன.

இலங்கையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமான பீப்பிள் லீசிங், இலங்கையின் இரண்டாவது பாரிய அரச வங்கியான மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு லீசிங் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட சேவைகளை நேரடியாக வழங்கும் குறிக்கோளுடன் 1995-ம் ஆண்டு மக்கள் வங்கியின் முழு உரித்துடைய துணை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது.

தற்போது பீப்பிள் லீசிங், சிறு கடன்கள், இஸ்லாமிய நிதிச் சேவைகள், சொத்து மற்றும் இழப்புக் காப்புறுதி மற்றும் மேலாண்மைச் செயற்பாடுகள் போன்ற பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றது.

மக்கள் வங்கிக் கிளைகளில் அமைந்துள்ள 37 பிராந்தியக் கிளைகள் மற்றும் 121 துணை அலுவலகங்கள் என தமது பரந்த வலையமைப்பின் ஊடாக நிதிச் சேவைகளை பீப்பிள் லீசிங் வழங்குகின்றது.

பொது வழங்கல் மூலம் பெறப்படும் நிதியானது 2011/12 நிதியாண்டின் எஞ்சிய பகுதியில் நிறுவனத்தால் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பங்கீடு வழங்கலின் பகுதி நிதிக்கு லீசிங், வாடகைக் கொள்வனவு மற்றும் கடன்கள் போன்ற நிதி உற்பத்திகளின் ஊடாகப் பயன்படுத்தப்படும்.

குறிப்பிட்ட நிறுவனத்தின் மூலதன அதிகரிப்புடன் இந்த பங்கு விநியோகமானது நிறுவனத்தின் கடனை சமமான நிலையை நோக்கி முன்னேற்றும் என குமாரகே மேலும் தெரிவித்தார்.

**பீப்பிள் லீசிங் பற்றி...**

1995-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பீப்பிள் லீசிங் வரையறுக்கப்பட்ட நிறுவனம்(PLCL) இலங்கையின் லீசிங் துறையில் அசைக்க முடியாத இடத்தில் உள்ளது.

கடந்த 15 வருடங்களில் லீசிங் துறையின் அனைத்து மட்டங்களிலும் அளப்பரிய நிபுணத்துவத்தை கட்டியெழுப்பியுள்ள பீபபிள் லீசிங் நிறுவனம் சிறந்த சந்தை முன்னோடியாக உள்ளது.

# வர்த்தக உலகம்

**ஆர்.எஸ்.கே.முருகதாஸ்**




சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் முன்னணித் தயாரிப்புகளில் ஒன்றான மஞ்சி ஏற்றுமதித் துறையில் சிறப்பாகச் செயற்பட்டதைக் கௌரவிக்கும் வகையில் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளன விருது வழங்கும் நிகழ்வில் 2 தங்க விருதுகளையும், வெள்ளி விருதினையும் பெற்றிருந்தது.

இவ்விருதினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச விடம் இருந்து நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சியா விக்கிரமசிங்க பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளன விருதுகள் 1993-ம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகின்றன.

# கச்சா எண்ணெய் விலை சரிவு

ஆசிய சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை சரிவடைந்து காணப்படுகின்றது.நியூயோர்க்கின் நவம்பர் மாத விநியோக ஒப்பந்தப்படி கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 84.12 அமெரிக்க டொலர்களாக உள்ளது.

இதேபோன்று பிரின்ட் நோர்த் ஸீ பகுதியின் டிசம்பர் விநியோக ஒப்பந்தத்தின் படி கச்சா எண்ணெய் விலை ஒரு சதவீதம் குறைந்து 111.10 டொலராக உள்ளது.முன் எப்போதும் இல்லாத அளவு சீனாவின் எண்ணெய் இறக்குமதி 12சதவீதம் குறைந்துள்ளதே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
| --- | --- | --- |
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6698.83 | 6549.91 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5978.14 | 5878.33 ⇩ |
| விலை அலைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,815.85 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* எஸ்.எம்.பி.லீசிங் (W) (0.40), ஓட்டோ ரோம் (976.70), சிங்கபுத்திர பினான்ஸ்(129.40),மல்வத்த(X)(7.20),சம்ஷன் இன்ரநெட்(160.00).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஏசியன் அலையன்ஸ்(240.30), இன்பிறாசக்ரர்(27.50),புளூ டைமன்ஸ்(X)(4.20),எஸ்.எம்.பி.லீசிங் (1.20), பின்லே. கொழும்பு(258.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# ஊழியர் சேமலாப நிதிய சொத்துக்கள் வருட இறுதியில் ஒரு ட்ரில்லியனாகும்

CENTRAL BANK OF SRI LANKA
EMPLOYEES' PROVIDENT FUND

இவ்வருடம் ஓகஸ்ட் 31இல் ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) மொத்தச் சொத்துகளினது பெறுமதி ரூ.976 பில்லியன்களை அடைந்து14.6 சத வீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

இவ்வளர்ச்சியுடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி 2011 இறுதி அளவில் ரூபாய் ஒரு ட்ரில்லியனை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஊழியர் சேம லாப நிதிய திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிதியத்தின் மொத்த வருமானமும்; குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்தமையானது ஊழியர் சேமலாப நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு உயர்ந்த வீதத்தில் வருமானதினைச் செலுத்துவதனை இயலச் செய்தது.

நிதியமானது ACA,ACMA,CFA மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமைகளையும் முதலீட்டு முகாமைத்துவத்தில் பயிற்சியையும் பெற்ற தொழில் சார் நிபுணர்களைக் கொண்ட குழுவினால் முகாமைப்படுத்தப்படுகின்றது.

நிதியத்தின் முக்கிய பங்கு(92 சதவீதம்) அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள வேளையில், நிதியம் அதன் மூல வளங்களில் 7 சதவீத்தினை பங்கு மூலதனத்திலும் ஒரு சதவீத்தினை கம்பனிகளின் படுகடன் கருவிகளிலும் முதலீடு செய்யப்பட்டு இருக்கின்றது.

உதவு தொகை செலுத்துகின்ற உறுப்பினர்களின் நிதியத்துக்குப் புறம்பாக பெரும் எண்ணிக்கையிலான ஓய்வு பெற்ற உறுப்பினர்களின் மீளப் பெறுவதற்குரிய சரியான வயதினை அடைந்த பின்னரும் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தமது நிலுவைகளை பேணி வருகின்றனர். இதற்கமைய ஊ.சே.நி. அத்தகைய ஆட்கள் அவர்களது ஓய்வின் பின்பும் தமது சேமிப்புக்களை பாதுகாப்புடன் உயர்ந்த விளைவு தரும் தேசிய ஓய்வூதிய நிதியத்தில் வைத்திருப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

பொருளாதாரத்தில் அனைத்துத் துறைகளிலும் புதிய பொருளாதார வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதனை இயலச் செய்த நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்ததன் பெறுபேறாக 2010 இல் 210,000 புதிய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.


# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
| --- | --- | --- |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.41 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.57 | 175.55 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.57 | 153.66 |
| சுவிஸ் பிராங் | 120.66 | 124.60 |
| கனேடிய டொலர் | 106.25 | 109.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.38 | 114.02 |
| சிங்கப்பூர் டொலர் | 85.37 | 87.83 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.24 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கிராமின் வங்கியும் பேராசிரியர் முகமட் யூனுஸும்




கிராமின் வங்கி என்பது பிணைவைப்பின்றி வறியவர்களுக்கு சிறு கடன்கள் வழங்குவதற்கென்று பங்களாதேஷில் தோற்றுவிக்கப்பட்ட நிதியமைப்பு.இதை ஸ்தாபித்தவர் பேராசிரியர் முகமட் யூனுஸ் ஆவார்.

**கிராமின் வங்கியின் தோற்றம்**

கிராமின் வங்கியின் ஸ்தாபகர் முகமட் யூனுஸ் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். 1976-ம் ஆண்டு ஜோப்ரா என்ற தன்னுடைய கிராமத்தில் மூங்கில் இருக்கைகள் செய்யும் ஒரு பெண்மணியுடன் பேச நேர்ந்தபோதே யூனுஸுக்கு சிறுகடன் பற்றிய எண்ணம் உருவானது. அப் பெண்மணி உள்ளூர் வட்டிக்காரரிடம் கடன் பெற்று மூங்கில் வாங்கி, இருக்கைகள் தயாரித்து, விற்ற பணத்தில் பெரும்பாலானதை கடன் கொடுத்தவருக்கு திருப்பித் தர வேண்டிய அவல நிலையை அறிந்தார். அவருக்கு எப்படியாவது உதவ முடியுமா என்று யோசித்திருக்கிறார்.பின் அவரும், அவருடைய மாணவர்களும் அக்கிராமத்தில் சிறிய ஆய்வை மேற்கொண்டபோது அந்தப் பெண்மணி போலவே 42 மூங்கில் கூடைசெய்பவர்கள் அதே பிரச்சினைக்கு உட்பட்டிருப்பதாகத் தெரிய வர, அவர்கள் அனைவரும் செலுத்தவேண்டிய தொகையை அவர்கள் சார்பில் யூனுஸ் பணம் Ø Ä பிநிகு அவர்கள் அனைவரும் அவருக்கு அந்தத் தொகையை திருப்பிக் கொடுத்து விட்டனர்.இச்சம்பவமே ஏழைகளுக்கு கடனுதவி செய்யும் திட்டத்தை மேற்கொள்ள காரணமாக இருந்தது.



கிராமின் வங்கி (தமிழில் கிராமிய வங்கி) முகமட் யூனுஸ் எண்ணத்தில் உருவாகி 1976-ல் தோற்றுவிக்கப் பட்டது.இவ் வங்கிச் சேவை சிட்டகொங் பல்கலைக்கழகத்தினை சூழவுள்ள பிரதேசங்களுக்கு ஆரம்பித்தது, 1983-ல் பங்களாதேஷத்தின் சட்டப்படியான வங்கி அமைப்பாக தன்னை மாற்றிக் கொண்டது.

சிறிய தொகையாக இருப்பதால் சிறுகடன் என்றழைக்கப்படுகிறது. இக்கடன்களைப் பெற பிணையாக எதுவும் வைக்கத் தேவையில்லை. யார் வேண்டுமானாலும் கடன் பெறலாம்.ஆனால் முதலில் ஐவர் சேர்ந்த குழுவாக சேரவேண் டும். முதலில் இருவருக்கு கடன் வழங்கப்படும். அவ்விருவரும் கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பித்தவுடன் மற்றவர்களுக்கும் கடன்கள் வழங்கப்படும். ஒருவர் கடனைச் செலுத்தாவிட்டால் ஏனையவர்களுக்கு கடன் மறுக்கப்படும்.இச் சிறுகடன் முறையை அடியயொற்றியே இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமின் வங்கி இன்றளவும் 5.1 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையினை 66 லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு கடனாக வழங்கியுள்ளது.சிறு கடன் பெறுபவர்களில் 96 வீதமானோர் பெண்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிராமின் வங்கி இரண்டாயிரத்து 226 கிளைகள், 18 ஆயிரத்து 795 ஊழியர்கள் மூலம் 71 ஆயிரத்து 371 கிராமங்களில் பணியாற்றுகிறது. இவ் வங்கிக்கு கடன்கள் மீளச் செலுத்தப்படும் வீதம் 98.85 ஆகும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

வறிய மக்களின் சமூக, பொருளியல் முன்னேற்றத்திற்காக முன்னின்று பாடுபட்டமைக்காக இவருக்கும், கிராமின் வங்கிக்கும் சேர்த்து 2006-ம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நவாலி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் தேவசுலோசனா நிதியத்தினால் 2010 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) உயர் பெறுபேறுகளைப் பெற்ற அப்பாடசாலை மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியொன்றினை அன்பளிப்பு செய்வதையும் பழைய மாணவர் ஒருவரினால் அவரது மகன் அமரர் க.துஷ்யந்தன் ஞாபகர்த்தமாக சகல துறையிலும் வெற்றியீட்டிய மாணவர் மூவருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நவாலி செய்தியாளர்)

## எச்.ஐ.வி. தொற்றுக்கு தினமும் ஒருவர் இலக்காகின்றார்

### அரையாண்டில் 17 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நாள்தோறும் இலங்கையில் குறைந்தபட்சம் ஒருவர் எச்.ஐ.வீ. நோய்த் தொற்றினால் பீடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் 71 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் 3 ஆயிரமாகக் காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 757 ஆக உயர்வடைந்துள்ளது. எயிட்ஸ் நோய்த் தொற்றினால் அதிகளவில் பெண்களே பாதிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நாடு முழுவதிலும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலியல் தொழிலாளிகள் இருப்பதாகவும் ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதியளவு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள் வதன் மூலம் நோய் பரவுவதனை தடுக்க முடியும் என சுகாதாரப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

(4-2)

## உண்ணாவிரத போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறது த.தே.கூட்டமைப்பு

### வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற ஏற்பாடு

(கொழும்பு)

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகரசபை மைதானத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்குமாறு அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. திங்கட்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

1. முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைகளை மாற்றி வெலிஓயா எனும் புதிய பிரதேச செயலகத்தை உருவாக்குவதன் மூலம் அம் மாவட்டத்திலுள்ள இன விகிதாசாரத்தை மாற்றி இனங்களுக்கிடையிலான கசப்புணர்வையும் அமைதி இன்மையையும் ஏற்படுத்தும் செயற்பாட்டை உடன் நிறுத்தவும்.

2. வடகிழக்கு மாகாணங்களில் போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டு உறவுகளையும் சொத்துக்களையும் இழந்துநிற்கும் நிலையில் காணிப்பதிவு என்னும் போர்வையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட மோசடியான நில அபகரிப்பு செயற்பாடுகளை உடன் நிறுத்தவும்.

3.வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இலட்சக்கணக்கான தமிழ் பேசும் (அரச ஊழியர்கள் உட்பட) சிறுபான்மை இனமக்கள், காணி, வீடு இன்றி நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் வேளையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் படையினரது குடியேற்றத் திட்டம் மற்றும் பெரும்பான்மை இன மக்களை குடியமர்த்துவதன் ஊடாக ஏற்படும் இன ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்தவும்.

இவ்வா றான எமது மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை அழிக்கும் செயற் பாடுகளைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடாத்தும் இம் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டு கோள் விடுக்கின்றோம் என அதில் கூறப்பட்டுள்ளது.

(4-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்கசிய குழுவினரால் நடத்தப்படும் நவதாரண்மை வாதமும் ஜே.வி.பி.பிளவும் எனும் தொனிப் பொருளிலான கருத்தாடலொன்று இன்று மாலை 4 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆரம்ப உரையினை சொ.சிவபாலன் வழங்கவுள்ளார்.

(4-12)

## 2011.10 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1775-ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத்தின் போர்ட் லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.

★ 1813-ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.

★ 1834-லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.

★ 1905-பிரித்தானியா, இந்தியாவில் வங்காளப் பிரிப்பு இடம்பெற்றது.

★ 1923-வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மீதான ஜேர்மனிய வான்படையின் முதலாவது தாக்குதல் இடம்பெற்றது.

★ 1942-மும்பாயில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40 ஆயிரம் பேர் உயிரிழப்பு.

★ 1949-கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1951-பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1964-மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.

★ 1973-ஹென்றீ கிசிங்கர், லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.

★ 1975-கிழக்குத் திமோரில் அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் இந்தோனேசியப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1984-தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டுடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

★ 1987-தெற்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சூறாவளியில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1996-குவாத்தமாலாவில் உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 84 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998-சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.

★ 2003-தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரின் எபாடி பற்றி எழுதப்பட்டது.

★ 2006-இலங்கையில் 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

**பிறப்புக்கள்**

★ 1854-ஆஸ்கார் வைல்டு, ஐரிய எழுத்தாளர் (இ.1900)

★ 1975-ஜாக் காலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்

**இறப்பு**

★ 1951-லியாகட் அலிகான், பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் (பி.1896)

**சிறப்பு நாள்**

★ உலக உணவு தினம்



★ 1799-பாஞ்சாலங்குறிஞ்சிமன்னன் கட்டப்பொம்மனின் நினைவு தினம் (பி.1760)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### கைவிலங்கின் நிழல்

காலாண்டு சாவுபோல
என் விழிகள் இமைப்பை மறந்து
நிஜத்தை அறுத்துக் கொண்டு
உன் இருண்ட கனவுகளை
விழிக்கச் செய்திருக்க வேண்டும்
இனித் தூறத் தொடங்கும்
மழைத்துளிகளும்
வந்து போகவிருக்கும்
வானவில்லும்
அமாவாசை முடிந்து
நிலவு காரிக்கும்
பொழுதுகளிலும்
நீ என்னோடு
இருக்கப்போவதில்லை
அவை மீண்டும் மீண்டும்
பிறந்து இறந்தாலும்
உன்னை நினைவுபடுத்துமே
உன் ஞாபகங்கள்
ஏன் இத்தனை
கொடூரமாய் இருக்கிறது
என் கசங்கிப்போன
தேசத்தின் ஒரு பகுதிபோல
என் இதயத்தை
உற்றுப்பாரேன்
நான் அகதி என்பது
புரியும் உனக்கு

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு-12

### காதல் சுகம்

பார்க்கும் விழிகளுக்கே
பாடும் பறவைகளுக்கே
பாடுகள் ஏற்கத் தெரியுது
பகுத்தறிவு மனிதனிற்கு மட்டும்
காதல் ஏன் கசக்கிறது
பெட்டியில் பூட்டி வைக்கும்
பத்திரப் பொருளல்ல காதல்
நினைத்தவர் நினைப்பவர்
உத்தரவு போட்டுவிட்டால்
உள்ளத்தில் சித்திரமாய் வரைவது
எட்டிப்பிடிக்க சிட்டுக்குருவி இல்லை
உள்ளத்தில் உதிக்க மொட்டு இல்லை
மேடையில் இசைக்க மெட்டு இல்லை
மணமுடித்துச் செல்ல பொட்டு இல்லை
இப்படி இல்லை இல்லையென்று
இருந்துவிட்டால்
தொல்லையே வாழ்வென
வைத்திடுவாய் முற்றுப்புள்ளி

ஜெயம்ஜெகன்
புதுக்குடியிருப்பு

### அவரவர் பார்வையில்

சிம்மாசனம்
உட்கார முடியாத வயோதிபருக்கு
அரசியல் கொடுத்த
நான்கு கால் இறைமை

நினைவு
உன் நினைவுகளை
அழிப்பதற்கு தினம்
சிகரெட் குடித்து
உன் ஈர நினைவுகளுடன்
சேர்த்து வெளிவிடுவேன்
கடைசியில் காணாமல்
போனது உன் நினைவுகள் அல்ல
என் நுரையீரல்தான்

கண்ணீர்
நரகபூமியில் நல்ல சொர்க்கம்
விழிகளின் சிப்பிக்குள்
திரண்டு கிடக்கும் முத்து!

எம்.நேதா, நெடுந்தீவு

### ஏமாற்றம்

என்னவளே
உன் கடைக்கண் பார்வைக்கும்
முத்தான புன்னகைக்கும்
என் இதயத்தை
உன்னிடம் அடகு வைத்தேன்
நீயோ என் இதயத்தை
மறுநாளே ஏலத்திற்கு
விட்டுவிட்டாயே

செ.கந்தவேள்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### அநாதைக் குழந்தைகள்

பிஞ்சு உடல் துடிக்கின்றது
பெத்தமனம் பதறுகிறது
காற்றைவிட வேகமாய்
காசுக்காய் ஓடும்– எம்
கருணையற்ற ஜீவன்கள் மத்தியில்
சிமிட்டுகின்ற இந்த சின்னமலர்
சீக்கிரமாய் வந்துவிட்டது
சீர்கெட்ட இந்தப் பூமியில்
சிரிப்பற்று வாழ்வதற்காய்...
மெத்தைகளில் உறங்கவேண்டிய
மென்மையான மேனியது
சாலையோரத்தில் ஓவியப்படம் போல்
சாய்ந்து கிடக்குதடி பூமித்தாய் மடியில்
சாட்டுப்போக்கு பல எம் உள்ளத்திலே
சாமி ஒழுங்காய்
படைக்கவில்லையென்று–அதை
சான்று கூறுகின்றது இந்த
சாலையோர அநாதைக் குழந்தை

சூ.யுட் டினேஸ் கொடுதோர்,
யாழ்ப்பாணம்

### இலக்குகள்

நீ சாதனை படைக்கப் பிறந்தவன்
உன் ஆளுமையே உனக்குத் தோழமை
தாண்டிவா தடைதனை தகர்ப்போம்
பாதையில் ஆயிரம் இடர்கள் உன்னை
எதிர்த்தபோதும் நீ... துணிந்து செல்
தூர இடைவெளிகள் ஒவ்வொன்றும்
உன் இலக்குகளின்
இலட்சணையாகட்டும்
துவண்டு விடாதே
தோழா!

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### இமயம் தொட...



இந்தப் பூலோகத்தில்
இறைவனால் உனக்கு
வழங்கப்பட்ட பாத்திரத்தினை
செவ்வனே செய்துமுடி
நினைத்தது நியாயமெனில்
நிறைவேற்று
அராஜகத்திற்கு அடிபணியாதே
நிழலுக்குப் பயந்து
இருளில் வாழலாமா?


மாவை நா.கஜேந்திரன்

### காயங்கள்

என் மனதில் காலம் இட்ட கோலங்கள்
ஆறாத வடுக்களாய் ஆயிரம்
ஆர்ப்பரிக்கின்றன அவற்றில் சில
அன்புத் தாயின் தனிமைக்கோலம்
ஆசை அப்பாவின் அநியாயமான இழப்பு
சோகத்தில் உறைந்திட்ட சோதரரின் நிலை
உயிரில் கலந்திட்ட நண்பர்களின் பிரிவு
ஏழையாய் மாறியதால் இழந்துபோன என் இலட்சியம்
என்னை அதிகாரத்தால் அடிமைப்படுத்தும் என் சூழல்
இவ்வுலகில் தலைதூக்கும் அநியாயங்கள்
ஏமாற்று, கொலை, களவு என்று
வரையமுடியாத அநியாயங்கள்
இதனால் இவ்வுலகின் மீது கொண்ட வெறுப்பு
இறக்கத் துடிக்கிறது என் இருதயம்
இருப்பினும் வந்து தடுக்கிறது
என்னைக் கருவிலே சுமந்தவளின்
அமைதியான முகம்

நா.துஷியந்தி
வள்ளிபுனம்.

## மௌனத்தின் தேடல் – 92



### கல்வி

பள்ளிச் சிறார்களே
செல்வம் இருக்கும்
வரை உதவும்
நீங்கள் இன்று
கற்கும் கல்வி
உங்கள் வாழ்வின்
இறுதி வரை
உதவும்

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

### வேலைவாய்ப்பு

பல்கலைவரை சென்று
பாங்குடன் கல்விகற்று
சிறந்தபெறுபேறு நீ பெற்றாலும்
செல்வாக்கு வெண்டும் தம்பி
நல்வேலை பெற்றிட

இனியா
நல்லூர்.

### ஆள்வதற்காய்

அறியாமையிருள் தளர்த்தி
அறிவுப் பசி தணிக்க
அணுகுகின்றேன்– என்
ஆசானை
அண்டமனைத்தையும்
ஆள்வதற்காய்...

வா.ஜெயப்பிரசன்னா
யா/ஹாட்லிக் கல்லூரி

### பலன் எங்கே

பெற்றோரைப் பிழிந்தெடுத்து
குற்றமறக் கல்வி கற்று
வெற்றிநடை போட்டு
மற்றோரை வாழ வைக்க
சிறுவனே நீயும்
வேற்று நாடு சென்று விடுவாயோ?

யாழ்நிலா
யாழ்ப்பாணம்.

### முயற்சி

கடல் போன்றது
இறங்குவது சுலபம்
அதில் நின்று
போராடுவதும்
இறுதியில் கரைசேர்வதும்
நம் கையில்!
நீரில் ஓடும் ஓடம்போல
நீண்டநேரம் ஓடலாம்
வெற்றியுடன் திரும்புவது
நம் முயற்சியில்

உதயகுமார் லவீனா
யா/வட.இந்து.ம.க.

### தனித்துவம்

வகுப்பறையில் மிளிரும்–உன்
வருங்காலம் வளமாய் ஒளிரும்

ஜெ.யு.ஜெனற்ரீன்
தும்பளை

### முதல்வன்

கல்வியை நேசித்தால்–நீ
வகுப்பிலே முதல்வன்
உறவுகளை நேசித்தால்–நீ
குடும்பத்தில் முதல்வன்
சமுதாயத்தை நேசித்தால்–நீ
நாட்டிற்கே முதல்வன்

நெய்தல், தேன்மொழி

### மதிப்பீடு

கற்றலின் திறவுகோல்
வினாக்களே ஆசானும்
அவ்வாறே மாணவரின்
அன்பு மட்டத்தை வினாமூலம்
மதிப்பீடு செய்கின்றார் வகுப்பில்

துரை
தெள்மட்டுவில்

### மானிடம்

கல்விக்கு ஏதடா எல்லை
போட்டிக்கு உண்டா தொல்லை
பாராட்டுப் பெறுதலிலா துன்பம்
பொறாமை கொள்வதிலா இன்பம்

யோ.யாழவன்
யா/நெல்லியடி ம.ம.வி

### அறிவு

ஆசிரியரின் கேள்விக்கு
கை உயர்த்தி
பதில் சொல்லும்– இந்த
மாணவனின் அறிவை
அருகிலிருக்கும்
மாணவ மாணவிகள்
உணர்ந்து கொள்ளவேண்டும்

செல்வி.அ.கிருஷாந்தினி
கொம்மாந்தறை

### நீயும் நானும்

இன்று என்னைப்போல்
மகனே நாளை– நீயும்
வேலையில்லாப் பட்டதாரி

த.ஜெசி
சுன்னாகம்.

### வாழ்வின் இரகசியம்

கல்வியே மூச்சு கல்வியே உயிர்
கல்வியே உலகம்
கல்வியே இலட்சியம்
கல்வியே காதல் என்று வாழ்ந்துபார்
உனக்கு வாழ்வின் இரகசியம் புரியும்

கு.நிஸாந்தி, நீர்[illegible]


### கல்விப் பயணம்

துள்ளித் திரியும் வயதினிலே
பள்ளி சிறுவர் உற்சாகம்
அள்ளி வளர்க்கும் அறிவினை
புள்ளி அதிகம் பெற்றிடவே
கல்விச் செல்வம் சிறப்புறுமே

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 93

அன்பு வாசகர்களே !



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 21.10.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# உள்துறை அமைச்சரின் உத்தரவுப்படி மூவரின் கருணை மனுக்கள் நிராகரிப்பு


மூவருக்குமான தூக்குத் தண்டனைக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த எட்டு வார இடைக்காலத் தடை சீக்கிரமே முடியப் போகிறது. மத்திய,மாநில அரசுகள் பதில் மனுத் தாக்கல் செய்யத் தயாராகி வரும் நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அதிமுக்கிய விவகாரத்துக்கு விடை கண்டிருக்கிறார் காங்கிரஸ் புள்ளியான திருச்சி வேலுசாமி. இந்த மூவரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் நிராகரித்தது ஏன்? மத்திய அமைச்சர்கள் யார் யார் கலந்து பேசி கருணை மனுக்களை நிராகரிக்க குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்தார்கள் எனப் பல கேள்விகளை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பினார் வேலுசாமி.



பலத்த இழுத்தடிப்புக்குப் பின்னர் இப்போது பதில் வந்துள்ளது. மூவர் தூக்கு விவகார· விசாரணை நெருங்கி வரும் நிலையில் உள்துறையின் பதில் குறித்து வேலுசாமியிடம் பேசினோம்.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் ஆரம்பத்திலிருந்தே ஆயிரக்கணக்கான குழப்பங்கள். இந்தியாவின் மாபெரும் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் சில விசமிகளை தப்ப வைப்பதற்காகவே பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை விசாரணை அதிகாரிகள் பலிக்கடா ஆக்கினார்கள். ராஜீவ் கொலை வழக்கு விவகாரத்தை விசாரிக்கும் பல்முனை நோக்கு விசாரணைக்குழுவிடம் நான் ஆரம்பம் தொட்டே பலவிதமான சந்தேகங்களையும் சொல்லி வருகிறேன். ஆனால் விசாரணை முற்றுப் பெறாத நிலையிலேயே இம் மூவரையும் தூக்கு மேடையை நோக்கி துரத்தும் விதமாக கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதன் பின்னணியில் யாருடைய கைங்கர்யம் இருந்தது என்பதை வெட்ட வெளிச்சமாக்க நினைத்தே என் மனதில் எழுந்த கேள்விகளுக்கு பதில் கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி 13.08.2011 அன்று மத்திய அரசுக்கு அனுப்பினேன். மூன்று பேருடைய தூக்குத் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் அது சம்பந்தமாக கேள்விகளுக்கு விரைந்து பதில் அளித்திருக்க வேண்டிய மத்திய அரசு திட்டமிட்டு தாமதம் செய்தது. அதனால் உரிய பதில் வராவிட்டால் நீதிமன்றத்திற்குச் செல்வோம் என நாங்கள் நினைவூட்டும் கடிதம் அனுப்பிய பின்னரே கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி பதில் வந்துள்ளது. (பதில் வந்த நகலை நம்மிடம் காட்டுகிறார்.) அதில் உச்ச நீதிமன்றம் தீர்ப்புச் சொன்ன பின்னர் கருணை காட்டுங்கள் என சொல்வது சரியான அணுகு முறையல்ல என்று மூவருடைய தூக்கு குறித்து பல விதமாக ஆலோசனைகளை நடத்திய பின்னரே உள்துறை அமைச்சகம் கருணை மனுக்களை நிராகரிக்க குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

அந்த கடித நகல்...



RTI Matter
by Speed Post

No. F. 16/1/2011-JUDL. CELL(Pt-I)
GOVERNMENT OF INDIA
MINISTRY OF HOME AFFAIRS
(JAISALMER HOUSE)

26 MAN SINGH ROAD, NEW DELHI-110011.
Dated 30th September, 2011.

To
Shri E. Velusamy,
EE.4, Housing Unit,
Salai Road, Trichy-3,
Tamil Nadu- 620003

SUBJECT:- Information sought under RTI Act, 2005- reg.

Sir,

I am directed to your letter dated13.08.2011 on the above subject and to furnish the point-wise information as available as under:-

2. Reply to Point No.(1) to (3): No mitigating circumstances were found to differ with the judgment of the Hon'ble Supreme Court of India, hence, Hon'ble President of India had rejected the mercy petitions of Murugan, Santhan & Arivu. At the time of examination of mercy petitions all the aspect of the case were considered. As per the procedure, mercy petition cases were examined in this Ministry and on the advice of the Minister of Home Affairs, the Hon'ble President of India has rejected the mercy petitions of Murugan, Santhan and Arivu.

3. Reply to Point No.(4): No such recommendation was made by former President of India Shri K. R. Narayanan in the reference case.

4. Reply to Point No.(5): These documents of the case are withheld for disclosure under section 8(1)(a)(b) & (g) of the RTI Act read with Article 74(2) of the Constitution.

5. Under the Right to Information Act, 2005, Shri K. C. Jain, Joint Secretary, Ministry of Home Affairs, North Block, New Delhi (Tele. No. 23092392) is the Appellate Authority in respect of information furnished by me.

Yours faithfully,


(L. L. Chugh)
Joint Secretary (Judl.) & CPIO,
Tele: 23074183

Copy to:-
i) Shri Amarendra Singh, US, MHA, North Block, New Delhi, w.r.t. OM No.A 43020/01/2011-RTI dated 19.08.2011.

(L. L. Chugh)
Joint Secretary (Judl.) & CPIO,

இதில் மிக முக்கியமான தகவல் மத்திய உள்துறை அமைச்சரான ப.சிதம்பரம் கருணை மனு நிராகரிப்பு குறித்து மத்திய அமைச்சர்கள் யாரிடமும் கலந்து பேசவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் கலந்து பேசித் தான் கருணை மனு நிராகரிப்பு குறித்து குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்ய முடியும்.

ஆனால் தன்னிச்சையாகவே ப.சிதம்பரம் கருணைமனுக்களை நிராகரிக்க குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்திருக்கிறார். மத்திய அமைச்சரவையில் உள்ள வேறு யாரையும் கலந்தாலோசிக்காமல் இப்படி அவர் செய்ததே தவறு. மூன்று பேர் தூக்கு குறித்த நீதிமன்ற விசாரணைகள் வேகமாகி வரும் நிலையில் உள்துறை செய்த இந்த குளறுபடியை மிக முக்கிய ஆவணமாக பதிவு செய்யலாம் என்று சொல்கிறார் வேலுசாமி.



வேலுசாமி

## ஜுனியர் விகடன்

தூக்குத் தண்டனைக் கைதிகள் குறித்த கருணை மனுக்களை மத்திய அமைச்சரவை கூடி விவாதித்து தன்னுடைய கருத்தை குடியரசுத் தலைவருக்கு சொல்ல வேண்டும். அந்த அடிப்படையில் அவர் முடிவை எடுக்க வேண்டும் என்பது தான் விதிமுறை. ஆனால் அப்படிப்பட்ட ஆலோசனைகள் நடக்கவில்லை என்பது வேலுசாமிக்கு வந்துள்ள கடிதத்தின் மூலம் தெரிந்து விட்டது. தனிப்பட்ட முறையில் உள்துறை அமைச்சரது ஆலோசனையை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டு இருக்கிறார். எனவே இந்த உத்தரவே செல்லாது என்கிறார்கள் தமிழ் உணர்வாளர்கள்.

# நீதிமன்ற வழக்குகளை விரைவுபடுத்த புதிய நீதிபதிகள் நியமனம்- ஹக்கீம்



(கொழும்பு)

நாட்டின் நீதித்துறை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு புதிய நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை நிறுவன சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறாவது சட்ட மாநாடு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்கேற்றதுடன் சொலிஸ்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பெர்ணான்டோ கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டில் 200 இற்கும் அதிகமானோர் பங்கேற்றிருந்தனர். மாவட்ட நீதிமன்றங்களில் சட்ட மத்தியஸ்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்வரும் மாதங்களில் புதிய நீதிபதிகள் நியமிப்பதற்கான நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதே ஜனாதிபதியின் இலக்காகையால் நீதிமன்ற கட்டமைப்பில் உள்ள வழக்குகளை விரைவாக தீர்க்க முடியாவிட்டால் ஆசியாவின் அதிசயம் என இலங்கையை நிச்சயமாக குறிப்பிட முடியாது என நீதி அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை நிறைவு செய்வதற்கு இந்த பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் எட்டு மாதங்கள் முதல் ஒரு வருடத்தை மாத்திரமே எடுத்துக் கொள்வதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதுவொரு சிறந்த இலக்காகும் என்றும் அனைவரின் ஒத்துழைப்புடன் இலக்கினை எட்ட முடியும் என தான் எதிர்பார்ப்பதாகவும் நீதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# மாலைதீவு குண்டு வெடிப்புடன் தொடர்புடைய நபர் கைதானார்

(கொழும்பு)

மாலைதீவில் குண்டுத் தாக்குதல் ஒன்றுடன் சம்பந்தப்பட்டு அங்கிருந்து தப்பி வந்து இலங்கையில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட மாலைதீவு பிரஜையை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சர்வதேச பொலிஸாரின் தகவலுக்கு அமைய மொஹமட் அமீன் என்ற மாலைதீவு பிரஜையை இலங்கை இரகசிய பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி மாலைதீவின் சுல்தான்பாப் பிரதேசத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புயைதான சந்தேகத்தில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பயாகல பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்ததை அடுத்து நீதிமன்றம் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.(4-2)

# சொத்து விபரங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியிட்டி வேட்பாளர்களின் சொத்துகள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம், கால எல்லையை நீடிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றுடன் முடிவடையவிருந்த கால அவகாசம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பீ.சுமனசிறி குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் கீழ் வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்வது கட்டாயமாகும் எனவும் இதற்கமைய சொத்துக்கள் மற்றும் உடைமைகள் குறித்த விடயங்களை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டுமெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# திருமுறிகண்டியை சேர்ந்த 15 குடும்பங்கள் சொந்த இடத்தில் குடியேற்றபடமாட்டார்கள்

## இவர்களுக்கு புதிய இடம் தெரிவு

(திருமுறிகண்டி)

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் உள்ள திருமுறிகண்டியைச் சேர்ந்த 45 குடும்பங்கள் அவர்களது சொந்தக் காணிகளில் மீளக் குடியேற்றம் செய்யப்படமாட்டார்கள் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் முறிகண்டி கோவிலுக்குத் தென் திசையில் உள்ள ஏ9 வீதியின் மேற்குப் பகுதியில் காணிகள் ஒதுக்கப்பட்டு அங்கு குடியேற்றம் செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த ஏற்பாடு தமக்கு விருப்பமில்லை என்று தெரிவித்துள்ள அந்த மக்கள் தங்களைத் தமது சொந்தக் காணிகளில் மீள் குடியேறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரி வருகின்றார்கள்.

ஆயினும் அரசாங்கத்தின் ஏற்பாட்டிற்கமைய குடியேற்றத்திற்குச் செல்லவிரும்பாத குடும்பங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய இடங்களைச் சேர்ந்தவர்களைக் குடியேற்றுவதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள கோம்பாவில் பகுதியில் குடியேற்றப்பட்டுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

பல வருடங்கள் பரம்பரையாகக் குடியிருந்து வந்த தமது சொந்தக் காணிகளை விட்டு விட்டு வேறிடத்தில் தங்களைக் குடியேற்றம் செய்வது நியாயமாற்ற செயல் என தெரிவித்துள்ள முறிகண்டி பிரதேச மக்கள் சொந்தக் காணிகளில் தம்மை மீள் குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனை சந்தித்து வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்து தமது உறவினர், நண்பர்களது வீடுகளில் வசித்து வருகின்ற திருமுறிகண்டியைச் சேர்ந்த குடும்பங்களின் குடியேற்றம் தொடர்பாக ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.4-2)

## சுஜீவ தாய்மை பேற்று வைத்திய நிலையம் யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சித்தஆயுள் வேதத்தை விருத்தி செய்யும் நோக்குடன் சுஜீவ தாய்மை பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்திய நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

வட இலங்கை சுதேச வைத்திய சபையின் கீழ் இயங்கக்கூடிய வகையில் இந்த நிலையம் யாழ்.நகரில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திசாநாயக்க, சுதேச வைத்தியத்துறை பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க, வட இலங்கை சுதேச வைத்தியசபையின் அணையாளர் பாலித்த வீரக்கோன் எனப் பலர் கலந்து கொண்டனர். (4-6)


# மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

(R-4740)

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் – முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

GOODLINE MANPOWER SERVICES

38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.

Tel : 011 3091521 Hotline : 077 3179592



union assurance
Trust in your tomorrow, today.

# வேலைவாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளே தங்களுடைய பொன்னான காலங்களை வீணாக்காமல் இணையுங்கள்

யூனியன் அஷ்யூரன்ஸில்




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

## பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5

தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 4

சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3

தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 2

காப்புறுதி ஆலோசகர் → பதவி-1

அடிப்படைத் தகைமைகள் :-

- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம் .
- திடசித்தம்.

(R-4739)

Note:- விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- செவ்வாய்க்கிழமை - 18.10.2011
நேரம் :- மு.ப 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இ.கிருபாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 0774115290





ஜெய்குருதேவ்

THE ART OF LIVING

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்

# வாழும் கலைப்பயிற்சி

மூச்சுப்பயிற்சி, யோகா, பிராணாயாமம், சுதர்சன கிரியா

அறிமுக உரை

இடம்:- 132, பலாலி வீதி (இந்து சமய பேரவை அருகில்)
திகதி:- 17.10.2011 நேரம் மாலை 5 மணிக்கு
பயிற்சி:- 18.10.2011-23.10.2011
நேரம்:- 6.00-8.30am, 3.00-5.30pm , 6.00- 8.30pm


(6603)

குறிப்பு:- 16.10.2011 ஞாயிறு மாலை 3 மணிக்கு ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கு சிறப்பு பயிற்சி. அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

மேலும் விபரங்களுக்கு:-
0777 250879, 0770474757


# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா அன்னபூரணம்



நீர்வேலி வடக்கு, காமாட்சியம்பாள் கூட்டுறவுச் சங்கத்தடியைச் சேர்ந்த நடராசா அன்னபூரணம் (14.10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை நடராசா (கார்க்கார நடராசா)வின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கோண்டாவில்), விநாயகமூர்த்தி (லண்டன்), கமலாதேவி, விமலாதேவி, திருஞானசம்பந்தன் (மூர்த்தி, கமநலசேவை நிலையம்), சிவபாலசிங்கம் (கொலன்ட்), அருளானந்தம் (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.


காமாட்சியம்பாள் சங்கத்தடி,
குறுக்குறோட், நீர்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6400)

# எத்தனை மக்களின் நிலங்களை மீட்டெடுத்துள்ளார் ஜெயலலிதா?

## கேள்வியெழுப்புகிறார் கருணாநிதி



அண்ணா அறிவாலயத்தைத் தொடும் நாள் தான் அ.தி.மு.க ஆட்சிகள் முடிவு நாளாக இருக்கும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி பிரசாரப் பொதுக்கூட்டத்தில் எச்சரித்துள்ளார்.

சென்னை மாவட்ட தி.மு.க சார்பில் மேயர் வேட்பாளர் மா.சுப்பிரமணியன் மன்ற உறுப்பினர் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரப் பொதுக்கூட்டம்திவான்மியூரில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கருணாநிதி பேசியதாவது,

நிலங்களை மீட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் ஒப்படைப்பதாகச் சொல்கின்றார் ஜெயலலிதா. எத்தனை பேருக்கு எவ்வளவு நிலம் இப்படி ஒப்படைக்கப்பட்டது என்று கேட்டால் அரசிடம் பதில் இல்லை. ஊரை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவே இப்படி கதை கட்டுகிறார்கள். உண்மையில் கொடநாடு மாளிகையில் பொது வழி நிலத்தை மீட்டுத்தான் மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

அறிவாலயத்தை எடுப்பேன் என்கிறார். அறிவாலயத்தை எடுப்பது என்ன அவ்வளவு சாதாரணமா? அப்படித் தொடும் நாள் அ.தி.மு.க ஆட்சிக்கு முடிவு நாளாக இருக்கும். தி.மு.க வின் சொத்து அறிவாலயம்.

ஏழை எளியோர் இரத்தத்தைச் சிந்தி எழுப்பிய கட்டடம் அது. தி.மு.கவின் சாதாரணத் தொண்டன் கூட அந்தக் கட்டடத்தை எடுக்க விடமாட்டான். எங்களுடைய நரம்புகள், எலும்புகள், மண்டையோடுகள் நொறுங்கிப் புதைந்து போனாலும் கூட அதை எடுக்க முடியாது. இதனை மற்ற கட்சியினரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அறிவாலயம் எப்படி வாங்கப் பட்டது எப்படிக் கட்டப்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ் மொழியும் செம்மொழித் தகுதியை அடைய வேண்டும் என்பதற்காக அரும் பாடு பட்டு சோனியாகாந்தி மூலம் அந்தத் தகுதியைப் பெற்றோம். அதன் அடையாளமாக அண்ணா மேம்பாலம் அருகே அமைக்கப் பட்ட பூங்காவிற்கு செம்மொழி என்ற பெயரை வைத்தேன். இப்போது செம்மொழிப் பூங்கா என்றபெயர் பலகையைப் படர்ந்த கொடிகளால் மறைத்துள்ளனர். பூங்காவை நான் திறந்து வைத்தேன் என்றகல்லையும் மறைத்துள்ளனர்.

கல்லறையில் கரிகாலன் கட்டினான். என்றா எழுதப்பட்டுள்ளது. ஆனால் வரலாறு அவன் பெயரைச் சொல்கிறதா இல்லையா? அதைப் போல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நான் தான் அந்தப் பூங்காவை திறந்து வைத்தேன். தமிழுக்கு செம்மொழி தகுதியைப் பெற்றுத் தந்தேன் என்பதை யாராலும் மறைக்க முடியாது.

சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு தமிழகம் அமைதியாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார் ஜெயலலிதா. ஆனால் இப்போது தான் அதிகம் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கொலை, கொள்ளைகள் அதிகரித்து உள்ளன.

எனவே சென்னை மாநகராட்சி தொடர்பான விடயங்களில் நன்கு பழகியவர்களுக்கு வாய்ப்பு அளித்தால் தான் தொடர்ந்து புத்துணர்ச்சியோடு அவரால் மேலும் அதிக சாதனை செய்ய முடியும். அதனால் மா. சுப்பிரமணியம் மற்றும் தி.மு.க வேட்பாளர்களைத் தேர்ந்தெடுங்கள் என்றார் கருணாநிதி. (4-2)

# சிரிய கலவரத்தில் 3000ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் ஐ.நா. தகவல்

(டமாஸ்கஸ்)


சிரியாவில் ஆட்சி மாற்றம் வேண்டி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஏழு மாதங்களில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மக்களை பாதுகாக்க அந்நாடு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐ.நா. உயர்மட்ட மனித உரிமை அமைப்பு அதிகாரி நவிபிள்ளை தெரிவித்துள்ளார்.

மேலும் அங்கு நிலைமை மோசமாகி விட்டது. உடனடியாக ஜனாதிபதி பஷர்அசாத் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் இரக்கமற்ற அடக்குமுறை மற்றும் பலி எண்ணிக்கை அதிகரித்தால் சர்வதேச நாடுகள் போருக்கு உள்ளாகும் என எச்சரித்துள்ளார். (4-2)

# பழைமைவாய்ந்த சீனப்பெருஞ்சுவர் இடிந்துவிழும் அபாயநிலை



உலக அதிசயங்களில் ஒன்றாக சீனப் பெருஞ்சுவர் திகழ்கிறது. இது சீனாவில் கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் மிங் அரசர் காலத்தில் கட்டப்பட்டது. 5 ஆயிரத்து 500 மைல் நீளமுள்ள இந்தசுவர் சீனாவின் 11 மாகாணங்களை உள்ளடக்கியுள்ளது. இத்தனை சிறப்பு வாய்ந்த சீனப் பெருஞ்சுவர் தற்போது இடிந்து வருகின்றது.

அதற்குப் பல இடங்களில் அந்த சுவர் சேதமடைந்து இருப்பது தான் காரணமாக கருதப்படுகிறது. மோசமான தட்ப வெப்ப நிலையும் இந்த சுவர் சேதமடைந்து வருவதற்கு மற்றொரு காரணமாகும்.

மேலும்சீனா-ஜப்பான்நாடுகளுக்கு இடையே நடந்த போரின் போது இக்கட்டடம் பல தாக்குதலுக்கு ஆளானது. அதேநேரத்தில் 1950 முதல் 1960 ஆம் ஆண்டுகளில் சீன பெருஞ் சுவரில் இருந்த செங்கற்களை அப்பகுதி கிராம மக்கள் இடித்து கொள்ளையடித்தனர். அவற்றை அதிக விலைக்கு விற்றனர்.

இதனாலும் சுவர் சேதம் அடைந்தது. அவை தவிர சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்ட பகுதியில் தங்கம், இரும்பு போன்ற உலோக தாதுக்கள் இருப்பதாக கருதப்படுகின்றது. எனவே அங்கு நிலத்தை தோண்டும் பணியில் சிலர் திருட்டுத் தனமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்த காரணத்தினாலும் பெருஞ் சுவர் இடிந்து வருகின்றது. (4-2)

# எயார்செல் மக்ஸிஸ் ஒப்பந்தம்மூலம் 549.96 கோடி ஆதாயம் பெற்றார் தயாநிதி

## சி.பி.ஐ.குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் குடும்பத்தினர் எயார்செல் மற்றும் மக்ஸிஸ் ஒப்பந்தம் மூலம் 549.96 கோடி ரூபா ஆதாயம் பெற்றதாக மத்திய புலனாய்வுக்கழகம் குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்விருநிறுவனங்களுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் மூலம் தயாநிதிமாறனின் சகோதரர் கலாநிதிமாறனுக்கு சொந்தமான நிறுவனம் 550 கோடி ரூபா ஆதாயமாகப் பெற்றுள்ளதாக மத்திய புலனாய்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

மத்தியபுலனாய்வுக்கழகம்பதிவுசெய்துள்ள முதல் தகவல் அறிக்கையின்படி மக்ஸிஸ் நிறுவனத்துக்கு ஏழு ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றை உரிமங்களையும் அதன் துணை நிறுவனமான Astro All Asia Network எனும் நிறுவனத்திற்கும் அதேயளவு உரிமங் களையும் தயாநிதிமாறன் ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன் குழுமத்தில் இந் நிறுவனம் 20 சதவீதமான பங்குகளைப் பெற்றுள்ளதுடன் Astro All Asia Network எனும் நிறுவனத்தின் 80 சதவீதமான பங்குகளை கலாநிதிமாறன் கொள்வனவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இந்தப் பங்கு பரிமாற்றத்தில் மட்டும் 550 கோடி ரூபாவை மாறன் சகோதரர்களின் நிறுவனங்கள் ஆதாயமாகப் பெற்றுள்ளதாகவும் இது ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றை உரிமத்துக்காக தயாநிதிமாறன் பெற்ற இலஞ்சம் எனவும் மத்திய புலனாய்வுக் கழகம் தனது முதல் தகவல் அறிக்கையில் தெரிவித்துள்ளது. (4-2)

# கனிமொழியின் பிணை மனு மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டது

(புதுடில்லி)


2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாடடு பதிவு செய்வது குறித்து எதிர்வரும் 22 ஆம் திகதி உத்தரவிடப்படும் என டில்லி சிறப்பு நீதி மன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒத்துக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பாக தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ராஜா, தி.மு.க. எம்.பி.கனிமொழி உள்ளிட்ட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக இரண்டு குற்றப் பத்திரிகைகளை டில்லி சிறப்பு நீதிமன்றில் சி.பி.ஐ தாக்கல் செய்துள்ளது. இந்நிலையில் இந்த வழக்கை கண்காணித்து வரும் உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் நடந்த விசாரணையின் போது இந்த வழக்கு எப்போது முடியும். இன்னும் விசாரணையே ஆரம்பிக்காமல் இருக்கிறதே. வழக்கு முடிவதற்கு ஏழு ஆண்டுகள் ஆகுமா என கேள்வி எழுப்பியது. இதைத் தொடர்ந்து டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி நேற்று முன் தினம் பிறப்பித்த உத்தரவில் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்வது குறித்து எதிர்வரும் 22 ஆம் திகதி உத்தரவிடப்படும்.

கனிமொழி உள்ளிட்டவர்கள் தாக்கல் செய்துள்ள பிணை மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து ஆரம்ப மாகும் என்றார். (4-2)

# எடியூரப்பாவை கைது செய் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது



(பெங்களூர்)


கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பாவை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என தெரிகிறது.

இவரது ஆட்சி காலத்தில் அரசு நிலத்தை தனது மகன்கள் நடத்தும் கம்பனிக்கு குறைந்த விலைக்கு தாரை வார்த்ததாக (அரசுக்கு 40 கோடி இழப்பு) லோக்அயுக்தா சிறப்பு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகின்றது. சிராஜின் பாட்சா பால்ராஜ் என்பவர் இந்த புகாரை தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் தனக்கு பிணை வழங்க வேண்டும் என எடியூரப்பா முன் பிணை மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. இவர்களது மகன்கள் மற்றும் முன்னாள்அமைச்சர் கிருஷ்ணய்யா ரெட்டி ஆகியோரது ஜாமினும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனையடுத்து வாரண்ட் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருப்பதால் அவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என தெரிகிறது.

சுரங்க மோசடி செய்ததாக இவர் மீதும் இவரது ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்தவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில் எடியூரப்பா முதல்வர் பதவியில் இருந்து விலகினார். ரெட்டி சகோதரர்கள் தற்போது சிறையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரேணுகா சௌத்திரி கூறுகையில், அத்வானி கர்நாடகாவில் இருந்து யாத்திரையை ஆரம்பிக்கட்டும். அவ்வாறு செய்தால் கூடுதல் பலன் தரும் என்றார். (4-2)



அரசு முறை பயணமாக டில்லி சென்ற மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்னை பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்று கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே பொலிஸ் நடமாடும் சேவை அவசியமானது

## வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் 2 மில்லியன்ரூபா செலவில் பொலிஸ் நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டது என வடபிராந்திய பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்தை தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற பொலிஸ் நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி சில்வா அவர்களின் தலைமையில் ஜனாதிபதி அவர்களின் பணிப்பிற்கமைய இந்த நடமாடும் சேவை நடைபெறுகின்றது.

இலங்யையில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளிலும், இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது கண்பார்வை குறைவானவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்குதல், தேசிய அடையாள அட்டையை விரைவாகப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் விண்ணப்பித்தல், பிறப்பு-இறப்பு பத்திரங்களை பெற்றுக் கொண்டுத்தல், சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தல், திருமண சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல், இலவசமாக வைத்திய பரிசோதனை மேற்கொள்ளுதல் போன்ற சேவைகள் உட்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இந்த பொலிஸ் நடமாடும் சேவை இடம்பெற்று வந்தாலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விசேடமாக பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு இந்த சேவை நடைபெற்று வருகின்றது.

இதற்குக் காரணம் கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிப்புற்ற பெருமளவான மக்கள் இந்த மாவட்டங்களிலே வாழ்ந்து வருகின்றமையால் இத்தகைய சேவைகள் அவசியமாக காணப்படுகின்றது.

அத்தோடு இப்பகுதி மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டுமென ஜனாதிபதி அவர்களும் அமைச்சர்களும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் பல முறை எமக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அத்தோடு மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளையும் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்தவும் கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்பு குழுக்களை அமைத்து மக்களுக்கு சேவை புரிந்து வருகின்றோம். எனவே யாழ்.மாவட்டத்தின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பாதுகாப்பதோடு மக்களுக்கு சிறந்த சேவை வழங்க இராணுவத்தினரும் பொலிஸாரும் உள்ளனர்.

கடந்த கால யுத்த சூழலின் போது இராணுவத்தினரும் பொலிஸாரும் பல உதவிகளைச் செய்துள்ளனர். அவர்களை மக்கள் மறக்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பொலிஸ் நிலைய தலைமையதிகாரி சமன் சிகேரா மற்றும் பல அரச அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

## பரீட்சை பகுப்பாய்வை சமர்ப்பிக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை தரம் 11 மாணவர்களுக்கு நடைபெற்ற சைவசமய பாடமுன்னோடி பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளி மற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-3-29)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி பூசை முடிவுற்றதும் கண்ணன் காட்டிய காட்சிகள் எனும் விடயம் பற்றி ஓய்வு பெற்ற அதிபர் புண்ணியமூர்த்தி கதிரித்தம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-12-35)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

வட்டுக்கோட்டை காளி கோவிலடியைச் சேர்ந்த மகாலிங்கம் யோகேஸ்வரி என்பவரது ஆள் அடையாள அட்டை(468432790 V) கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (4-12)

# பயங்கரவாத வெற்றிக்கு பாதாள கும்பலால் பாதிப்பு

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக பெறப்பட்ட வெற்றிக்கு பாதாளக் கும்பல்களால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பயங்கரவாத்திற்கெதிரான போரில் ஜனா திபதியும் பாதுகாப்புத் தரப்பினரும் பெற்ற வெற்றி காரணமாக வெளிநாடுகளில் புலிகளுக்கு ஆதரவானவர்கள் கொதித்துப் போயுள்ளார்கள்.

அதற்கெதிராக சிற்சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நாட்டில் மனித உரிமை மீறல்களும் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளில் முறைகேடுகளும் இடம்பெறுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றார்கள்.

அவ்வாறான நிலையில் பாதாள உலகக் கும்பல்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப்புலி ஆதரவாளர்களின் குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பது போன்று ஒரு மேம்பாடு உருவாக்கப்படுகின்றது. அதன்காரணமாக பயங்கரவாதத்துக்கு எதிராக பெறப்பட்ட வெற்றி பாதாள உலகக் கும்பல்களின் செயற்பாடுகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகின்றது என்றும் அவர் தொடர்ந்தும் தெரிவித்தார். (4-2)

# அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அரச அதிபர்கள் கவனமெடுப்பது அவசியமானது

## மாவட்ட அரச அதிபர்களுக்கு ஜனாதிபதி அறிவுரை

அரச நிறுவனங்களின் மூலமாக மக்களுக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை முறையாகவும் உரிய நேரத்திலும் செய்து முடிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அந்த சேவையை முன்னெடுப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு இடையிலான முறையான தொடர்பு மிகவும் இன்றியமையாததாகும் என்று ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாண்டிற்கான வரவு- செலவுத் திட்டம் தொடர்பில் அரச அதிபர்களுக்கு தெளிவுபடுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும் குறைபாடுகள் தொடர்பில் அரச அதிபர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

புதிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலான வளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் ஏற்படுகின்ற சுற்றாடல் பிரச்சினை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்திய ஜனாதிபதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற வேளையில் சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்கை கவனத்தில் கொள்ளாது செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல தற்போதைய நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தை கடுமைப்படுத்தவும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கும் முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து செயற்படல் வேண்டும் என்றார். (4-2)

# ஐக்கிய தேசியக்கட்சி தலைமைக்கு எதிராக கரு ஜெயசூரிய கருத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேல் மாகாண உறுப்பினர் சிறால் லக்திலக்க இடைநிறுத்தப்பட்டமையை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் கரு ஜெயசூரிய ஆட்சேபித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது அதிகாரத்தை பயன்படுத்தி சிறால் லக்திலக்கவின் உறுப்புரிமையை அண்மையில் இரத்துச் செய்தார்.

இந்நிலையில் குறித்த முடிவு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று கரு ஜெயசூரிய கடிதம் மூலம் .ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன மற்றும் லக்திலக்க ஆகியோரின் வெளியேற்றத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஷ கண்டித்துள்ளார். (4-2)

# ஹஜ் யாத்திரிகர்களிடம் கூடுதல் தொகையை அறவிடுவோருக்கு எச்சரிக்கை-ஹஜ் குழு

(கொழும்பு)

ஹஜ் யாத்திரிகர்களிடம் கூடுதல் தொகையை அறவிடுகின்ற ஹஜ் முகவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஹஜ் குழு எச்சரித்துள்ளது.

இம்முறை ஹஜ் யாத்திரை தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கருத்து வெளியிட்டார்.

ஹஜ் யாத்திரைக்காக இலங்கைக்கு இம்முறை வழங்கப்பட்டுள்ள கோட்டா அளவு குறைக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பேச வேண்டிய சில சர்ச்சைக்குரிய விடயங்கள் மக்காவில் பேசப்பட்டுள்ளதாலேயே இம்முறை ஹஜ் கோட்டா குறைவடையக் காரணமாக அமைந்துள்ளதென கொழும்பு மாநகர உறுப்பினரும் ஹஜ் குழுவின் உறுப்பினருமான அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை கோட்டா அனுமதிகள் குறைவடைந்ததன் காரணமாக சில முகவர்கள் நான்கரை முதல் ஐந்து இலட்சம் ரூபா வரைபணம் கேட்பதாக தொழில்நுட்பபிரதி அமைச்சரும் ஹஜ் குழுவின் மற்றுமொரு உறுப்பினருமான பைசா முஸ்தபா கூறுகின்றார். (4-2)


## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே எமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின்மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு மூக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம் மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த மூன்று நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

இச் செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்
ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!

(6363)

நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலை கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காணமுடியாது.

~ பர்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## லியம் பொக்ஸ் முதலாவது... பான் கீ மூன் இரண்டாவது...

பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சரும் இலங்கை அரசின் நெருங்கிய நண்பருமாகிய லியம் பொக்ஸ் நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

வன்னியில் போர் நடந்த காலத்தில் இலங்கை அரசின் ஆயுதக் கொள்வனவிற்கு சட்டவிரோதமாக உதவினார் என்ற குற்றச்சாட்டை பிரித்தானிய ஊடகங்கள் வெளியிட்டதைத் தொடர்ந்து லியம் பொக்ஸ் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த மிக மோசமான -கொடூரமான இன அழிப்பின் நிகழ்வுகளை ஏற்கெனவே காணொளியாக விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது.

இலங்கையின் கொலைக்களம் என்ற இந்தக் காணொளி உலகம் முழுவதிலும் இலங்கை அரசின் தமிழின வெறுப்பை வெளிப்படுத்தி இருக்கும் இவ்வேளையில்,

இப்போது ஒரு புதிய அத்தியாயம் தோற்றம் பெற்றுள்ளது.

அந்த அத்தியாயம் தமிழ் இன அழிப்பு நடவடிக்கைக்கு உதவியவர்களை சங்காரம் செய்வதாக அமைந்துள்ளது.

அந்த சங்காரத்திற்கு முதலாவதாக பலியானவர் லியம் பொக்ஸ்.

அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்பது தமிழ்ப் பழமொழி. வன்னியில் அன்று அரசன் அறுத்தான். இப்போது தெய்வம் நின்றறுக்கும் காலம்.

அந்தக் காலம் வேலை செய்யத் தொடங்கி விட்டது. அது பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் அமைச்சர் பதவியை அறுத்து எடுத்துவிட்டது.

ஈழத் தமிழ் இனத்திற்கு துரோகம் செய்த நீ, அமைச்சராக இருப்பது ஆகாது என்பது போல, தெய்வத்தின் அறுப்பு நடந்தேற,

வன்னிப் போரில் கதறியழுது கண்ணீர்விட்ட தமிழ் மக்களின் அவலத்திற்கு காரணமான இன்னும் பலர் அறுபடவுள்ளனர் என்பது உறுதியாகிவிட்டது.

வன்னியில் நடந்த கொடூரத்தை சிமிட்டல் கண்ணால் கண்டும் காணாமல் இருந்த ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் கூட தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

# இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணை தேவை

## அமெ.மாநில ஆட்சி பீட பிரதிநிதிகள் கூட்டாகக் கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவையானது என அமெரிக்காவின் மாஸ்ஸாசுசெற்ஸ் மாநில ஆட்சி பீட பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபை மாஸ்ஸாசுசெற்ஸ் மாநில ஆட்சிபீடமொன்றில் சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் என்னும் ஆவணப்படத்தை திரையிட்டிருந்தது.

இந்த ஆவணப்படம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே மாஸ்ஸாசுசெற்ஸ் மாநில ஆட்சிப் பீட பிரதிநிதிகள் கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள செயலர் ஹிலாரி கிளின்ரன் அம்மையாருக்கு அனுப்பி வைத்துள்ள கடித்த்திலேயே இந்தக் கோரிக்கையை அம் மாநில ஆட்சிப் பீட பிரதிநிதிகள் முன்வைத்துள்ளனர்.

சுதந்திரமான சர்வதேச விசாரணையொன்றை ஏற்பாடு செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் ஹிலாரி கிளின்ரன் அம்மையாரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மாஸ்ஸாசுசெற்ஸ் மாநில ஆட்சிபீட பிரதிநிதிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் முழுவிபரம்,

இலங்கையில் அண்மைக் கால முரண்பாடுகளின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்களையும் ஏனைய துஷ்பிரயோகங்களையும் செய்தவர்களை கண்டுபிடிப்பதற்கான தேவை பற்றி நாங்கள் உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம். இந்த விடயம் பற்றிய இராஜாங்க திணைக்களத்தின் விசாரணைகளையும் இரண்டு அறிக்கைகளையும் வரவேற்கின்றோம்.

கவலைக்குரிய விதத்தில் மனிதத்துக்கு எதிரான சர்வதேச அளவிலான சட்டவிரோதமான இந்த குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் செய்தவர்கள் இன்றுவரை சட்ட விதிவிலக்கு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையின் போர்க் குற்றங்கள் பற்றி தனக்கு ஆலோசனை வழங்க ஒரு நிபுணர்கள் குழுவை நியமித்ததை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். போர்க் குற்றங்கள் மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச சட்டங்கள் இலங்கை அரசாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் மீறப்பட்டுள்ளமை பற்றி நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை"இந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை கொண்டுள்ளது.

மேலும் இந்த நிபுணர்கள் குழு ஐ.நா. செயலாளர் நாயகம் உடனடியாக ஒரு சர்வதேச அளவிலான விசாரணையை நடத்தும் செயற்பாட்டை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

மேற்படி குற்றங்கள் பற்றிய விசாரணைக்காக தான் கற்றறிந்த பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான குழுவொன்றை அமைத்திருப்பதாக இலங்கை அரசு தெரிவிக்கிறது. ஆனால் இந்த குழு பக்கசார்பற்ற சுதந்திரமான அமைப்பாக இல்லை. இந்த குழு பற்றி ஐ.நா. நிபுணர்கள் இது ஆழமாக பழுதுபட்ட அமைப்பாகவும் சர்வதேச தராதரத்தை பெறாததாகவும் உள்ளதனால் இது இலங்கை ஜனாதிபதியும் ஐ.நா. செயலாளர் நாயகமும் ஒன்றாக ஏற்றுக் கொண்ட விசாரணைகளுக்கான பொறுப்பை திருப்திப்படுத்த முடியாததாக அமைகிறது என்று தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு மேற்படி போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகளை பொறுப்புடன் நடத்தும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. இரு பகுதியினராலும் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் பற்றி ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவையானது. ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறான சுதந்திரமான சர்வதேச விசாரணையொன்றை ஏற்பாடு செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என அந்தக் கடிதத்தில்கூறப்பட்டுள்ளது.(பா)

# ஆசைவார்த்தைகளை அள்ளிவீசும் ஆட்சியாளர்கள் கேட்பதை நாம் கொடுக்கலாமா? (மத்22:15-21)

இன்றைய நற்செய்தியில் இயேசு தம்மை சோதிக்கவந்த பரிசேயரைப் பார்த்து வரி செலுத்தும் நாணயத்தில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது என கேட்கிறார். அவர்கள் சீசருடையவை என்கிறார்கள். அதற்கு இயேசு சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் என்றார்.

இந்த நிகழ்ச்சியை வைத்து இயேசு யாருடைய உருவம் நம் இதயத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நமக்கு கற்பிக்கிறார். நம்முடைய இதயம் கடவுக்கு மட்டுமே உரித்தானது. மற்றவர்கள் எம்மை பார்க்கும் போது

### பரமபிதா காட்டிய பாதை

எம் இதயத்தில் பொறிக்கப்பட்டுள்ள அவருடைய அடையாளமாக பார்க்க வேண்டும். உரோமைப் பேரரசர்களுக்கு சீசர் என்னும் சிறப்புப் பெயர் உள்ளது. அதற்கு அரசர் என்று பொருள் உள்ளது. இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனப் பகுதி உரோமையரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. எனவே உரோமைக்கு வரி செலுத்தப் பயன்படுத்தப்பட்ட நாணயத்தில் சீசரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. சீசரின் நாணயத்தைச் சீசருக்குக் கொடுப்பது சரியே என்றாலும் கடவுளின் சாயலை மனிதர் தாங்கியிருப்பதால் மனிதர் கடவுளுக்கே சொந்தமானவர் என்னும் ஆழ்ந்த உண்மையை இயேசு உணர்த்தினார்.

உரோமானியர்கள் தம்முடைய அரசர்களை தெய்வீகமானவர்கள் என்று நினைத்து வாழ்ந்து வந்தார்கள். இதனால் அவர்களின் அடையாளம் பொறிக்கப்பட்ட நாணயத்தை எப்போதும் வைத்திருப்பர். இதை அவர்கள் தம் மனித கடவுளை எப்போதுமே தம்மிடம் வைத்திருப்பதாக கருதினர். இயேசுவிடம் அவர்கள் இந்த கேள்வியை கேட்கும் போது அந்த நாணயத்தை வைத்திருந்தனர். இயேசு உண்மையான மெசியாவாக இருந்தால் அயல் நாட்டின் வரிகளுக்கும் அடிமைத்தனத்திற்கும் அவர் விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என பரிசேயர்கள் எதிர்பார்த்துதான் இதைக் கேட்டனர்.


அவர்கள் கபட வேடம் போடுகின்றார்கள் என்று இயேசுவிற்கு நன்கு தெரிந்திருந்தது. ஆயினும் இயேசு அவர்களது கபட வேடத்தை வெளிக்காட்ட விரும்பவில்லை. உண்மையான மெசியாவின் இலக்கு என்ன என்று காட்டவே விரும்பினார்.

மக்கள் தமது நாட்டு அரசிற்கு செலுத்த வேண்டிய கீழ்ப்படிதலை விளக்கி காட்டுவதுடன் அவர்கள் மகிமையும் வல்லமையும் உடைய கடவுளுக்கு உரிய முறையில் புனிதமான அர்ப்பணத்தை காட்ட வேண்டும் என தெளிவுபடுத்துகின்றார்.

எனவே மக்கள் கடவுளுக்கும் நாட்டின் அரசுக்கும் கீழ்ப்படியும் கடமை உடையவர்கள். இதனால் கடவுளுக்குரியதை கடவுளுக்கும் நாட்டு அரசுக்குரியதை அரசுக்கும் கொடுக்க வேண்டியது கடமையாகும் என்பதை உணர்த்துகின்றார்.

இங்கு சீசர் என்றும் கடவுள் என்றும் இயேசு வேறுபடுத்திக் கூறுகின்றார் எனப் பொருளை எடுத்துக் கொண்டு அரசியலுக்கும் சமயத்திற்கும் இடையே உறவு இருக்கக்கூடாது என்று இயேசுவின் வார்த்தைகளுக்கு சிலர் தவறாக விளக்கம் கொடுப்பதுண்டு. அரசியலில் சமயக் கருத்துக்கள் நுழையும் போது சமயச் சார்பற்ற தன்மை ஆபத்துக்கு உள்ளாகக் கூடும் என்பது தெளிவு. அதேநேரத்தில் கடவுள் மனிதரிடம் எதிர்பார்க்கின்ற நற்பண்புகள் அரசியலில் துலங்க வேண்டும் என்பதையும் நாம் மறந்த விடக்கூடாது.

ஒருமுறை காந்தியடிகள் சமயத்தில் ஊன்றியிராத அரசியல் மக்களைச் சுரண்டுகின்ற அரசியலாகும் எனக் கூறியது இன்று எஃது நாட்டிலும் நிஜமாகின்றதை நாம் காண்கின்றோம்.



எனவேஎங்கள் வாழ்வால், செயலால் இயேசுவின் வார்த்தைக்கு வளமூட்டுவோம். அனைவரும் ஆண்டவனின் சாயலை தாங்கியிருப்பதால் மற்றவர்களும் ஆண்டவரின் அன்புக்கு உரியவர்கள் என்பதை உணர்ந்து ஒருவரை ஒருவர் மனிதமாண்போடுநடத்தபழகுவோம்.

கடவுளுக்கு கீழ்ப்படிந்து மக்களை அடிமைகளாக அடக்கி ஆட்சி செய்யாது வெளியுலகுக்கு கூறுவது போல்

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

மக்களை உண்மையாகவே நேசித்து அடிமைத்தனம், அடக்கமுறை போன்றவற்றிலிருந்து விடுவிக்க உழைக்கும் ஆட்சியாளர்கள் இந்த மண்ணில்வாழ நாம் கருவிகளாவோம்.

இதனால் அனைவரும் அனைவரையும் நேசிப்பார்கள். மனித குலமும் மாண்பு பெறும்.

இன்று கடவுளுக்கு நாம் காணிக்கையாக வெறும் நாணயத்தை அல்ல நம்மையே நம் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் எம் ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும் என்னும் மாபெரும் உண்மையை யும் இயேசு உணர்த்துகின்றார்.

ஏமாற்றும் ஆட்சியார்கள் கேட்பதை நாம் கொடுக்காவிட்டாலும் என்றும் எம்மை அன்பு செய்து ஆளும் எம் ஆண்டவன் கேட்பதை கொடுப்போம்.

SAMSUNG

விரல்கள் விழிப்பை ஏற்படுத்தட்டும்

உங்களுக்கு சிறந்த சலுகையை கொடுப்பதற்கு ஸேம்ஸங்கும் டயலொக்கும் இணைந்துள்ளது.







ஸேம்ஸங் ஹீரோ 1085 இனை கொள்வனவு செய்து இலவசமாக டயலொக் ப்ரீ பெய்ட் இணைப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்

3 மாதங்கள்
வரை ஒவ்வொரு மாதமும்
டயலொக்கிலிருந்து டயலொக்கிற்கு
1000 SMS இலவசம்

ஸேம்ஸங் ஹீரோ 1085
- அட்வான்ஸ் மொபைல் ட்ரெகர்
- வர்ணத்திரை
- 26 மணித்தியால FM ரேடியோ பாவனை
- 12 மணி நேரம் பேசும் வசதி
- MP3 ரிங் டோர்ன் / வொய்ஸ் கீய் டோர்ன்ஸ்
- 40 மணித்தியால ப்ரைட் டோர்ச் பாவனை

இலவசமான அசல் ஸேம்ஸங் ஹான்ட்ஸ் ப்ரீ கிட்

ரூபா. 2,990/=

Next is what?
SAMSUNG mobile

2011 அக்டோபர் 20 வரை செல்லுபடியாகும் இச்சலுகையை நாடுமுழுவதுமுள்ள ஸேம்ஸங் மொபைல் வியாபாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதனை மீட்டுக்கொள்வதற்கு எந்தவொரு டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கும் விஜயம் செய்யுங்கள்.




கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம்
உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும்
சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

தற்போது விற்பனையில்...
யாழ்.மக்களின் நன்மதிப்பை பெற்ற
KUBOTA - K-550 Landmaster



நீங்கள் நாடவேண்டிய இடம்,
எஸ்.பி.என். மோட்டேர்ஸ்
145, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# பூமியின் பொக்கிஷங்கள், எரிகற்களின் பரிசு



எரிகல்

பூமியின் அடியில் புதையுண்டு கிடக்கும் தங்கம் போன்ற மதிப்புமிக்க உலோகங்களின் படிவுகள், பூமியைத் தாக்கிய எரிகற்களின் பரிசு என்கிறார்கள் பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

இது தொடர்பாக, 'நேச்சர்' இதழில் அவர்கள் வெளியிட்டுள்ள கட்டுரையில், பூமி தோன்றிய 20 கோடி ஆண்டுகள் கழித்து, விண்ணில் இருந்து வந்து பூமியைத் தாக்கிய எரிகற்களாலேயே மதிப்புமிக்க உலோகப் படிவுகள் ஏற்படுகின்றன என்று தெரிவித்துள்ளனர். பூமி உருவான போது, உருகிய இரும்பு, பூமியின் மத்தியில் திரண்டு அதன் அடிப்படையை உருவாக்கியது.

அப்போது அது பெருமளவிலான தங்கம், பிளாட்டினத்தையும் எடுத்துச் சென்றது. உண்மையில் பூமி முழுவதும் 4 மீற்றர் கன முள்ள அடுக்கால் மூடும் அளவிலான தங்கம், பூமியின் மத்திய பகுதியில் உள்ளது.



தங்கச் சுரங்கம்

பூமியின் 'சிலிக்கேட் மேண்டிலிலும்' முன்பு கருதப்பட்டதை விட ஆயிரக்கனக்கான மடங்கு அதிகமான தங்க, பிளாட்டினப் படிவுகள் இருப்பதாக கருதப்படுகிறது. ஆகவே, தங்கம், பிளாட்டினம் போன்றவை முற்றிலுமாக மத்திய பகுதிக்கு சென்றிருந்தால், மேலடுக்குகளில் இந்த அளவில் அவை காணப்படாது என்கிறார்கள் ஆய்வாளர்கள். மேலடுக்கில் இவ்வளவு அதிகமான தங்க, பிளாட்டின படிவுகள் காணப்படுவதற்கு, பூமியில் பொழிந்த விண் எரிகல் மழைதான் காரணம். அந்த விலை மதிப்பு மிக்க உலோகப்படிவுகள் அனைத்தும் பூமியின் மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விடவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்..

# தொடரைத் தனதாக்கியது மேற்கிந்தியத் தீவுகள் அணி




(மிர்பூர்)

இரண்டாவது ஒருநாள் போட்டியில் சாமுவேல்ஸின் அதிரடி கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 8விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வென்று தொடரை கைப்பற்றியது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி மிர்பூரில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகுர் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ஆரம்ப வீரர் தமீம் இக்பால் (1) ஏமாற்றினார். அனுபவ வீரர்கள் இமருல் ஹய்ஸ், அஷ்ரபுல் டக் அவுட்டாகினர். நாசிர் ஹுசைன் (50) முஷ்பிகுர் (69) ஓட்டங்களை எடுத்து பலம் சேர்த்தனர்.

பங்களாதேஷ் அணி 48.5 ஓவரில் 220 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

எளிய இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சிம்மன்ஸ் (80) சிறப்பான ஆரம்பம் தந்தார். பான்ஜா (39),சாமுவேல்ஸும் (88) கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 42.4 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 221 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதையடுத்து ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2:0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை தனதாக்கியது.

# லசந்த கொலை வழக்கின் சந்தேக நபர் மரணம்

சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான வழக்கின் முதலாவது சந்தேகநபர் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

மார்பு வலி காரணமாக சந்தேகநபர் கடந்த 13ஆம் திகதி தேசிய வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மகசீன் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரதான சந்தேகநபர் பீ ஜேசுதாசன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 44ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் நேற்றுமாலை உயிரிழந்தார். (பா)

# வியட்நாம் ஜனாதிபதி தாயகம் திரும்பினார்

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த வியட்நாமின் ஜனாதிபதி ட்ருவோங் ரான் சாங் நேற்று பிற்பகல் தமது தாயகம் திரும்பியுள்ளார். அதேவேளை தாயகம் திரும்புவதற்கு முன்னர் வியட்நாம் ஜனாதிபதி, வாட் பிளேசில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வியட்நாமிய தூதுவராலயத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (பா-9)

# காதலிப்பதாக...

வீட்டில் தங்கவைத்துவிட்டு இளைஞன் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். தொடர்ந்து ஒரு வார காலமாக வவுனியா திரும்பாத இளைஞன் குறித்து பிரஸ்தாப பெண் தொடர்பு கொண்டு கேட்டபோது, தான் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையிலுள்ளதாக அவ் இளைஞன் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த வியாழக்கிழமை வவுனியாவிலிருந்து பெண்ணை வரவழைத்த இளைஞன் நேற்று முன்தினம் நண்பர் ஒருவரின் உதவியுடன் நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

நெடுந்தீவு ஊடாக தலைமன்னாருக்கு சென்று அங்கு தங்கியிருப்போம் என இளைஞன் அப் பெண்ணிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினமிரவு குறித்த பெண்ணை இரு இளைஞர்களும் நெடுந்தீவு கடல் ஊடாக படகு ஒன்றில் தலைமன்னாருக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது நடுக்கடலில் படகை நிறுத்திய இருவரும் கடற்படையினர் ரோந்து வருவதனை அவதானிக்குமாறு அப் பெண்ணிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் படகின் முன் பகுதியில் ஏறி நின்று கடலை அவதானிக்க முற்பட்ட பெண்ணை கடலுக்குள் தள்ளிவிட்டு அப் படகில் இரு இளைஞர்களும் தப்பித்துள்ளனர்.

எனினும் நீச்சல் தெரிந்த பிரஸ்தாப பெண் அதிகாலை வேளை மீன்பிடிக்குச் சென்ற மீனவர்களின் உதவியுடன் நெடுந்தீவில் கரையேறினார்.

பின்னர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற குறித்த பெண் வழங்கிய முறைப்பாட்டையடுத்து நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுச் சேவையில் யாழ்ப்பாணத்திற்கு தப்பிக்கவிருந்த இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் பிரஸ்தாப பெண்ணிடமிருந்து இரு இளைஞர்களும் அபகரித்த 21 பவுண் தங்கப் நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (பா)

# இலங்கைக்கு கனடா கொடுக்கும்...

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை பொது நலவாய நாடுகளின் தலைவர் களின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் தமக்கு திருப்தி தராது போனால் 2013இல் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாகவும் கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் கூறியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் இது தொடர்பாக கலந்துரையாடப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் தனது நிலைப்பாட்டை அங்கு தெளிவுபடுத்துவார் என்றும் கனேடியப் பிரதமரின் தொடர்பாடல் களுக்கான இணைப் பணிப்பாளர் அன்ரூ மைக் டௌகல் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கனேடிய ஊடகம் ஒன்றில் ஒரு மாதத்திற்கு முன்னர் நடத்தப்பட்ட வட்ட மேசை கலந்துரையாடல் ஒன்றில் பிரதமர் ஸ்ரீபன் காபர் இந்த விவகாரம் தொடர்பாக வெளிப்படுத்திய நிலைப்பாட்டில் இருந்து தடுமாறவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். இந்தக் கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்திருந்த கனேடியப் பிரதமர் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைக்கு இலங்கை இடமளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் பொதுநலவாய, மாநாட்டை புறக்கணிக்கும் நிலைப்பாட்டை ஏனைய தலைவர்களும் எடுக்க வேண்டும்.

நான் பிரதமராக இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது போனாலும் ஏனைய தலைவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் பொருத்தமான நடவடிக்கை எடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் கனேடியப் பிரதமர் ஹாபர் கூறியிருந்தார். இது கனேடியப் பிரதமரின் கருத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்து வதும் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதும் 54 நாடுகள் அங்கம்வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் பணியே. இந்த விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இதனை மதிக்க வேண்டியது இலங்கையை பொறுத்த விடயம் என்று கனேடியப் பிரதமர் கூறியுள்ளார்.

இதுபற்றி அவுஸ்திரேலியாவில் கலந்துரையாடப்படும் என்று கனேடியப் பிரதமரின் தொடர்பாடல்களுக்கான இணைப் பணிப்பாளர் அன்ரூ மக் டௌகல் மேலும் கூறியுள்ளார்.

ஆனால் இந்த விவகாரம் குறித்து பொது நலவாய மாநாட்டில் கலந்துரையாடத் தேவையில்லையென்று தமது நாடு கருதுவதாக கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா கூறியுள்ளார்.

பேர்த்தில் பிளவுகளை உருவாக்க தாம் விரும்பவில்லை என்றும்கனடாவும் அதையே விரும்பும் என்று கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற பொது நலவாய மாநாட்டிலேயே 2013இல் இலங்கையில் பொதுநலவாய தலைவர்கள் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டு விட்ட நிலையில் மீண்டும் இந்த விவகாரத்தை கையில் எடுப்பதை இலங்கை விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதான குற்றச்சாட்டையும் இலங்கைத் தூதுவர் நிராகரித்துள்ளார். ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் இல்லாத-அபாண்டமானவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கனடாவின் தேசிய ஜனநாயக கட்சியின் வெளிவிவகாரப்பிரிவைச் சேர்ந்த ஹெலன் லவென்டியர், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் அவசியம் என்று தமது கட்சி கருதுவதாக கூறியுள்ளார்.

கனேடியப் பிரதமர் பேர்த் மாநாட்டில் இது பற்றி கலந்துரையாடுவார் என்று நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பொது நலவாய அமைப்பு தென்னாபிரிக்க விவகாரத்தில் கையாண்டது போன்று இந்த விடயத்திலும் முக்கிய பங்கை வகிக்க முடியும் என்றும் ஹெலன் லவன்டியர் கூறியுள்ளார். (பா)

# பலாலி ஆசிரியர் ...

யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சில நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் என்ற வகையில் மேற்கொண்டு வருகின்றேன்.

மாதம் தோறும் அதிகரித்து வரும் வன்முறைகளையும் அதனால் கிடைக்கும் முறைப்பாடுகளை யும் குறைக்க வேண்டும் என பல தரப்பட்டவர்களும் எனக்கு அறிவுறுத்தினார்கள்.

இதனால் இவ்வாறான நடவடிக் கைகளில் ஈடுபடுபவர்களை சமுதாயத்தில் இனங்காட்டப்போவதாக ஊடகங்கள் மூலம் அறிவித்திருந்தேன்.

இருப்பினும் பாதிக்கப்படுபவர்களின் எதிர்காலம் கருதி முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்படுபவர்களையும் முறைப்பாடு செய்பவர்களையும் இனங்காட்டவில்லை.

அவ்வாறே பலாலி ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் மாணவர் விடயத்தையும் கையாண்டேன்.

ஆனால் ஊடகங்கள் அச்செய்தியை மிகைப்படுத்தி வெளியிட்டதற்கு நான் எவ்வாறு பொறுப்புக் கூறமுடியும்? அத்தோடு கலாசாலையின் அதிபர் எனக்கு எதிராக ஆசிரிய மாணவர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வைத்துள்ளார்.

அத்தோடு பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும் என்றும் இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பத்திரிகையில் அறிக்கை விட்டுள்ளார்.

பெண்கள் பாலியல் நுகர் பொருளாக பார்க்கப்படுகின்றனர் என்றுதான் நான் செய்தி வெளியிட்டேன். முறைப்பாடு கிடைத்ததனால் தான் அவ்வாறு வெளியிட்டேன்.

எனவே செய்யாத குற்றத்திற்கு மன்னிப்பு கோரமுடியாது நீதிமன்றம் சென்றால் ஆதாரங்களுடன் வரத்தயாராகவே உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்


பதக்கம்
சகல சௌபாக்கியங்களுக்கும்


சிலை
ஐஸ்வரியம் பெருகும்


பாதுகை
ரகசியமாக செல்வம் பெருகும்




யந்திரம்
அனைத்து வேலைகளுக்கும்


ஆமை
பகல் 2 மடங்கு இரவில் 4 மடங்காக செல்வத்தை பெருக்கும்

Product inside
1. Two Shri Dhan Laxmi Kavach (24ct.gold plated foil pendant)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)



கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
பதிவுக்கு இன்றே முந்துங்கள்!

புதிய தொழில்நுட்பத்தில் முழுமையான மந்திரங்கள், சுலோகங்கள் மற்றும் பக்திப்பாடல்கள்
தீப ஆர்த்தி
இசைக் கருவி




flex அருள்
Sri Lanka Contact
No: 04, IBC ROAD, WELLAWATTE.
India Branch: Jain Plaza, #8, 1St Floor, 124/63, Pondy Bazar T.Nagar, Chennai-600 017.

மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!

JAYA TV CAPTAIN TV MEGA TV Z தமிழ்

(Sri Lanka Contact)
0777 614 186

FLEX Graphic


உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134



# ஜனாதிபதி மகிந்தவுக்கு...

துள்ளார் அவரது உறவினர்களை சர்வதேசபோர்விதிகளுக்கு முரணாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவுப்படி இராணுவம் கொன்று விட்டதாக வழக்கை தொடர்ந்திருந்தார். இவ் வழக்கிற்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ஆனால் அதனை ஏற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார். எனவே இது தொடர்பான கடிதங்கள் மற்றும் அழைப்பாணையை திருப்பி அனுப்பியது அலரி மாளிகை. இதனால் இந்த அழைப்பாணையை அவருக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது.

அமெரிக்க சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர் குறிப்பிட்ட வழக்கு குறித்து நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

அழைப்பாணையை அனுப்புவதன் மூலமோ இல்லை கடிதம் ஒன்றை அனுப்புவதன் மூலமோ குற்றஞ்சாட்டப்படும் நபர் தனக்கு எதிராக நீதிமன்றில் ஒருவழக்கு தொடரப்பட்டுள்ளதை அறிய வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனை அறிய மறுப்பதால் இலங்கையில் இருந்து வெளிவரும் 2 பத்திரிகைகளில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணையை முதல் பக்கத்தில் விளம்பரமாக பிரசுரிக்க உத்தரவிடுமாறு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார்.

மேலும் தமிழ் நெட் இணையத்திலும் பிரசுரிக்கும் வகையில் இந்த உத்தரவு இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு உத்தரவை வழங்கியுள்ளது.

இதன்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான அழைப்பாணை உத்தரவை தமிழ் நெட் இணையமும் இலங்கையிலிருந்து வெளியாகும் இரண்டு பத்திரிகைகளும் பிரசுரிக்கும்.

இதன் மூலம் மகிந்த ராஜபக்ஷ மீது அமெரிக்காவில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்ற செய்தி அதிகார பூர்வமாக்கப்படும்

இந்த நிலையில் அமெரிக்க நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் ஆஜராகி அல்லது தன் சார்பில் வழக்கறிஞர் வைத்து அவர் தனது விளக்கத்தைச் சமர்ப்பித்ததாக வேண்டும்.

ஒருவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதையும் செய்யாவிட்டால் பல பின்விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும் என அமெரிக்க சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)


கார் விற்பனைக்கு
64- தொடர் இலக்க NISSAN SUNNY (B-13) டீசல் கார் விற்பனைக்குண்டு.
பார்வையிடும் நேரம் : ஞாயிறு காலை 9 மணி முதல் 5 மணிவரை
தொடர்பு :- 0770871609
021-3211516
(6391)



வீடு வாடகைக்கு
யாழ் நகரிலிருந்து 3km சுற்றாடலில் அமைதியான சூழலில் 05, 06 பேர் கொண்ட குடும்பத்தினருக்கு வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0777311453
(6399)



மாபெரும் விலைத் தள்ளுபடி
(இணுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | ~~6000~~ | 4250 |
| மரக் கட்டில் | ~~7250~~ | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | ~~13500~~ | 11250 |
| செற்றி செற் | ~~27000~~ | 22000 |

மெத்தை (Arpico), கணினி மேசை, கணினி திரை, றெசின் ரேபிள், சோக்கேஸ், அயன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V.ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சுமெத்தை.
தொடர்புகளுக்கு:- 0773583879, 0212227892
(சி-4622)



தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Thu 4.30-5.30 PM
MCS
MOBILE NET COMPUTER SERVICES
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் 17.10.2011 க்கு முன் நேரில்
Course fee Free Diploma courses, BCS-UK, IELTS, TOEFL, CCNA, Oracle Java, Engineering-USA
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்



குமார் ரெக்ஸ்
KUMAR TEX
யாழ் நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்
குமார் ரெக்ஸ்
மொத்த புடவை வியாபாரம்
இல. 127/14, யுமிலி பயார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
உரிமையாளர்: ப. பத்மகுமாரன், யோகாஸ் புடவையகம்
(சி-4738)




விநு ரெக்ஸ்
VINU TEX
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாரி, சல்வார், சேட், ரீசேட் வகைகள், டவுசர் வகைகள் மற்றும் பெண்களுக்கான அனைத்துத் துணி வகைகள் நாடவேண்டிய இடம்.
குறிப்பு: ஐப்பசி மாதம் 1ஆம் திகதி (தமிழ்) பட்டுப் புடவை வியாபாரம் ஆரம்பிக்க இருப்பதனை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
15,16 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
T.P. 021 3215948, 021 222 3918




Metro Travels
விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 12800 |
| Colombo-Tiruchirapally-Colombo | 13000 |
| Colombo-Doha | 22000 |
| Colombo-London | 42500 |
| Colombo-Toronto | 80500 |
| Colombo-Singapore-Colombo | 30500 |
| Colombo-Frankfurt | 40000 |
| Colombo-Milan | 56500 |
| Colombo-Rome | 55500 |
| Colombo-Paris | 60500 |
| Colombo-Zurich | 58500 |

All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance,
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply
மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanly Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404,0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm
(சி-4734)


## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தேசிய மாநாடு, பிரதிநிதிகள் சபைக் கூட்டம் ஆகியவற்றிற்கான அறிவித்தல்

தலைமை : திரு.வி.ரி. சகாதேவராசா (தலைவர் - இ.த.ஆ.ச)
இடம் : யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : I. தேசிய மாநாடு 04-11-2011 காலை 9.30 மணி
II. பிரதிநிதிகள் சபைக் கூட்டம் - 04-11.2011 மாலை 02.30 மணி தொடக்கம் மாலை 06.00 மணிவரை நடைபெறும். தேவையேற்படின் மறுநாள் அதே மண்டபத்தில் காலை 09.00 மணிக்கு ஆரம்பித்து தொடர்ச்சியாக நடைபெறும்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தேசிய மாநாட்டில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும நிர்வாக சபை உறுப்பினர்களையும் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.
புதிய நிர்வாகிகள் தெரிவு தொடர்பான விபரங்கள், தேர்தல் விதிகள், மாதிரி வேட்புமனு விண்ணப்பங்கள் சகல கிளைச் செயலாளர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பிரதிநிதிகள் தேவையான விபரங்களை கிளை/ மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

நன்றி

இ.த.ஆ.சங்கம்
தலைமைப் பணிமனை
40, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 14-10-2011

சரா புவனேஸ்வரன்
பொதுச் செயலாளர்
(சி-4736)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.